மாதர் மனோரஞ்சினி.

"எண்ணும் எழுத்தும் கண்ணெனத்தகும்"—ஔவையார்.

Vol-XIII. Madras: March 1911. No. 3.

புத்தகம் - கங. சென்னப்பட்டணம்: மார்ச்சுமீ 1911. இலக்கம்-3.

மூலாதாரப்படிப்பு.

"ஆனரபில் மிஸ்டர் கோகலே மூலாதாரப்படிப்பு மசோதாவை ராஜப் பிரதிநிதிச் சட்டசபையில் கொண்டுவர கவர்ன்மெண்டை அனுமதி கேட்ட போது, மூலாதாரப்படிப்பை வரவர இலவசமாயும் கட்டாயமாயும் செய்ய வேண்டுமென்றும், அப்படி உலகத்தில் நாகரிகமுள்ள தேசங்களிலெல்லாம் செய்யப்பட்டு வருகிறதென்றும், ஸிலோன் என்ற இந்தியாவை யடுத்த சிறு தீவிலும் இந்தியாவிலேயே பரோடா சமஸ்தானத்திலும் அப்படிச் செய்யப்பட்டு வருகிறதென்றும், ஆகையால் இந்தியாக் கவர்ன்மெண்ட் இந்த விஷயத்தில் முன் செல்லச் சித்தமா யிருக்கவேண்டுமென்றும், வெகு விஸ்தாரமாயும் சாமர்த்தியத்துடனும்" பேசியது யாவருக்கும் திருப்திகரமாயிருக்கிறது.

ராஜப்பிரதிநிதி லார்ட் ஹார்டிஞ்ஜ் காங்கிரஸின் விக்ஞாபனப் பத்திரத்துக்குப் பதில் சொன்னபோது, கல்வி அபிவிருத்தியைப்பற்றி வெகு அனுதாபத்துடன் பேசியிருக்கிறார். நமது கவர்னர் ஸர் ஆர் தர்லாஸியும் "ஜனங்களுக்குப் பெரும் விரோதி அவர்களுடைய அறியாமை" யென்று ஒரு சமயததில்சொன்னார். ஆகையால் மூலாதாரப்படிப்பு இந்தியர்களுக்கு அவசியம். இதை வரவர கட்டாய மாக்கவேண்டுமென்றும் மிஸ்டர் கோகலேயின் முக்கிய எண்ணம். 18-வருஷங்களுக்கு முன்னால் பரோடாவில், இவ்விதம் செய்யப்பட்டுவந்தது. இபபோது 8-வருஷங்களாக 6-வயது முதல் 12-வயது வரையிலுள்ள பையன்களும், 6-வயது முதல் 11-வயது வரையிலுள்ள பெண்களும் பாடசாலைகளில் படிப்பது கட்டாய மாக்கப்பட்டிருக்கிறது.

இம்மாதிரியே அதையும் இந்தியா முழுவதும் செய்யவேண்டுமென்ற பல கனவான்களின் எண்ணம் நிறைவேறுமென்று நம்ப இடமிருக்கிறது. இந்தியக் கவர்ன்மெண்டார் இவ்விஷயத்தில் ஒரு வித முடிவுக்கு வருவார்களென்று நபபப்படுகிறது. இவ்வித ஏற்பாடு உண்டானால நமது பெண்மணிகள் படிகக ஆரமபிப்பார்கள. ஒரு வேளை உயர்தரப்படிப்பும் இவர்களுக்கு வரும் பக்ஷத்தில் படித்த மருமகன் கேட்கும் ரூபா 2000, 1000, 500 என்ற

தூர் வழக்கம் நீங்கும். நல்ல அறிவும், தெய்வ பக்தியும், இன்னும் ஒவ்வொருவருக்கும் பலமாக அதிகரிக்கும்.

படித்த பெண்கள் படித்த கணவனைத் தேடும்போது மார்க்கட் விலை குறையும். மருமகன் முதலியவர்களின் கர்வம் பங்கமாய்விடும். இம்மசோதா வந்திருக்கிறது நல்லகாலம். இது மாத்திரம் ஊர்ஜிதத்திற்கு வந்துவிட்டால் இந்தியாவிற்கு மிக நன்மையைப் பற்பல வழிகளில் உண்டாக்கும் என்று திடமாக நம்புகிறோம்.

ஆகையால் நமது காருணிய கவர்ன்மெண்டாரும் டிஸ்டிரிக்ட் போர்டாரும் இவ்விஷயத்தில் தங்கள் கவனத்தைச் செலுத்தி இம்மசோதாவுக்கு அநுகூலமாக தங்கள அபிப்பிராயத்தைக் கொடுப்பார்களென்றே எண்ணுகிறோம். பொது ஜனங்களும் ஒத்துழைத்து தங்களாலியன்ற நன்மையைச் செய்ய முன்வரவேண்டும்.

பால்யவிவாகம்.

அதிசீக்கிரத்தில் சீர் திருத்தப்படவேண்டிய விஷயங்கள் பலவற்றுள், பால்யவிவாகமொன்று. அதாவது பெண்களை அவர்கள் சிசுக்களாயிருக்கும் போதே-பிராயமடைவதற்கு முன்னதாக-விவாகம்செய்து கொடுப்பது.

விவாகமெனும் பதத்தின் பொருளைக்கூட நன்கு அறிய முடியாத அவ்வயதில் அவர்களுக்கு மணம் நடத்துவிப்பது எவ்வளவு கெடுதியான காரியம்? நம்தேசத்தில் ஐரோப்பியர்களுக்குள் வழங்கிவருவதுபோல், மணமகனும், மணமகளும் நேரில் கலந்து, தங்கள் மனது பரஸ்பர ஒற்றுமையை அடைந்த பிற்பாடு விவாகம் செய்துகொள்ளுகிற தென்றவழக்கமில்லை. அது இல்லாதது நமது நற்காலமே; ஏனெனில் அதனால்தான் அடையக்கூடிய நன்மையைப் பார்க்கிலும் கெடுதியே மிகுதியாயுள்ளது. அவர்களுள்ளும் கூட, மேலேகண்ட இருவரும் நேரில் கலந்து கொண்டபோதிலும் அநேகமாய் பெற்றோரின் சம்மதம் கேட்டு விவாகத்தை நடத்துகின்றனர். தற்சமயம், பால்யவிவாகம் அனுஷ்டானத்திலில்லாத சற்று நாகரீகமடைந்த சாதியாருள் தாயும், தகப்பனும் மற்றக் குடும்ப முக்கியஸ்தர்களுமாக ஒரு கணவனை தீர்மானஞ்செய்து அதற்கு பெண்ணின் நோக்கத்தையும் ஒருவாறு அவள் நடையாலும், செய்கையாலும், குறிப்பாய் அறிந்தே விவாகம்செய்து கொடுக்கிறார்கள். இவ்வித நல்ல வழக்கங்களுக்கு இடமில்லாதபடி பெண்களுக்கு அவர்கள் சிறுமிகளாயிருக்கும்போதே, ஆயுள்கால பரியந்தம் நிலைக்கவேண்டிய விவாகத்தின் குண குணங்களும், புருஷன் பெண்சாதி நடந்துகொள்ளவேண்டிய விதமும் அறிய முடியாத அப்பருவத்தில் மணம் நடத்துவிப்பது மிகவும் விசனிக்கத்தக்க விஷயமாயிருக்கிறது.

இவ்வழக்கத்தால் ஏற்படும் கெடுதி இம்மட்டோ? சிறுமியாயிருக்கும் போதே விவாகம் நடந்து அப்பெண் புத்தியறியுமுன், அவளது புருஷனை

இறந்துபோகும் விஷயத்தில், அப்பெண்ணை மறுவிவாகம் செய்துகொள்ள இடங்கொடாமல், தலையை முண்டிதம்செய்து, வெள்ளையுடுத்து வித்து, மற்றவிதமான அலங்கோலங்களெல்லாம் செய்து முடித்து, அவள் ஆயுள் பரியந்தம் கைப்பெண்ணாயிருக்கும்படி கட்டாயம் செய்கிறார்கள். கற்றுத்தேர்ந்த புத்திமான்களும், அவ்வித துர்பாக்கிய நிலையை அடைந்த பெண்ணின் பெற்றோருங்கூட அக்குழந்தையின் மனவருத்தத்தையும் மற்றக் கஷ்டங்களையும் சிறிதேனும் கவனியாது, தாங்கள் மாத்திரம் தங்கள் மனைவி இறந்த 16-வது தினத்திற்குள்‘ மயானக்கட்டத்திற் வைத்தே வேறு பெண் தீர்மானஞ் செய்வதில் கருக்காயிருக்கிறவர்கள், அப்பேர்ப்பட்ட பெண்ணுக்கு மறுவிவாகம் செய்யக்கூடாது என்று சொல்வதோடுகூட, அதை மிஞ்சி, செய்யப்பிரயத்தனம் செய்பவர்வழியிலும் எம்மட்டு தடை செய்யலாமோ அம்மட்டும் செய்கிறார்கள். பிறவிடையான பிற்பாடு விவாகம் நடந்து கணவனையிழக்கும் பெண்களின் மறு விவாகத்தைப்பற்றி இப்போது நான் ஒன்றும் பேசப்புகலவில்லை. அதற்கு முன்னரே விவாகம் நடந்து கணவனையிழந்து தன் கணவன் முகத்தைக்கூட கண்டறியாத பால்ய விதவைகளின் (Virgan Widows) பரிதாபமான நிலையைச் சற்றும் கவனியாது நம்தேசத்தார் இன்றும் பழையபடியே செய்து வருதல் மிகவும் வருந்ததக்கது.

அவ்வித வழக்கத்தை அனுசரித்துவரும் சாதியாருடன் பேசும்போது பெரியவளானபின் விவாகம் நடக்கும் பெண்ணின் கணவன் திடீரென அகஸ்மாத்தாய் சாகிறதில்லையோ என பதிலளிக்கின்றனர். அவ்விதம் புருஷனை இழப்பவர்களின் நிலைமையையும் பரிதபிக்கத்தக்கதே. ஆனால் அதிலும் இது கொடிதன்றோ? மேலும் பிறவிடையானபின் விவாகம் நடந்து பின்னர் விதந்துவாயிருக்கிறவர் தொகையிலும், அதற்கு முன்னரே விவாகம் நடந்து விதந்துவாகிறவர்களின் தொகை அதிகமன்றோ! பால்யத்திலே விவாகம் நடத்தும் வழக்கம் வழங்கிவரும் பிராமணருள் சிறு விதவைகள் அதிகம். இதற்கு காரணம் என்ன? முக்கியகாரணம் பால்யவிவாகமே.

தவிரவும் பால்யத்திலே கல்யாணம் நடத்தப்படவேண்டுமென்பதற்குத் தகுந்த முகாந்தரம் ஒன்றுகூட இருப்பதற்குத் தெரியவில்லை. சாதாரணமாக நாம் கேள்விப்படுவதெல்லாம், அவ்வயதிலேயே மணம் நடத்தாவிடில் பெண்களின் நடைகெடுமென்பதும், நம்முன்னோர்களால் அனுஷ்டிக்கப்பட்டதென்பதும், மற்றும் இதுபோன்ற போலி முகாந்திரங்களுமேயாம்.

முதலாவதாக நடைகெடும் எனும் காரணத்தைச் சற்று கவனிப்போம். இப்போது பெரியபெண் ஆனபிற்பாடு விவாகம்நடக்கிற சற்று நாகரீகமடைந்தசாதியாரைக் கவனிக்கும்போது அவ்விதமான நடைகெடுமென்பது தப்பு. அக்காரணத்தால்இயலவேயில்லையெனத்தெரியவரும். தக்கபருவத்தை அடைந்துள்ள அப்பெண்களும் தங்களுக்கு இசைந்த சரியான வரன் கிடைக்க வேண்டுமே என்ற எண்ணத்தால், மிகவும் ஒழுங்காகவும், நல்ல மாதிரியாயும் நடந்துகொள்ளுகிறார்கள். அதில் கெட்டவர்கள் ஒருவர் இருவர் இருக்கலாம். அதனால் அவ்வழக்கமே, மிகவும் கெட்டதென்று சொல்வது சரியன்று. மேலும் பால்யத்தில் விவாகம் நடக்கும் சாதியாருள்ளும் பெரியவளானவுடன் கெட்டழிந்துபோம் பெண்களைப் பார்த்ததில்லையா! ஆதலின் கற்புக்கும் பால்யவிவாகத்திற்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. அவரவர் கற்-

புக்கு அவரவர்மனதே அரண். ஆதலின் நடைகெடும் எனும் வாதம் முற்றிலும் பிசகானது.

நமது முன்னோர் செய்தபடியே நாமும் செய்து வரவேண்மெனும் கொள்கையும் இத்தன்மையதே. நமது மூதாதைகள், அவர்கள் வஸ்திரங்களை முட்டுக்கு மேலேயே, கட்டிவந்தார்கள். அதற்கு கீழ்கட்டி அறியார்கள். இக்காலத்தில் அவ்விதம் செய்தல் பொருந்துமா? இதனால் நம் மூன்னோரை நான் இகழ்ந்து பேசுவதாக நினைத்துவிடக்கூடாது. அவர்கள் காலத்துக் கேற்றவண்ணம் நடந்திருக்கலாம். அவர்கள் செய்துள்ள வற்றையெல்லாம் அவர்கள் செய்துவந்தனர் எனும் காரணம் பற்றி, நாமும் செய்வது சிலாக்கியமன்று. காலத்துக்கேற்றவண்ணம் நடந்துகொள்வது முன்னுக்குவரும் வழிகளில் ஒன்றன்றோ? "புதியன புகுதலும் பழையன கழிதலும் வழுவல கால வகையினாலே" என்பதற்கிணங்க, காலமாறுதலுக்கேற்ற வண்ணம் தற்சமயம் பெருங்கெடுதியை விளைத்து ஒன்றுமறியா அநேக ஏழைச்சிறுமிகளை இம்மையிலேயே நரகத்துக்கனுப்பிவிடுகிற கொடிய பழக்கமாகிய பால்யவிவாகத்தை நிறுத்துவதற்கு கற்றறிந்த கனவான்களும் மற்றமாதர்களும் அதிக உற்சாகத்தோடும், ஊக்கத்தோடும் உழைப்பதோடு, ஜனங்களின் தப்பான எண்ணங்களுக்கும்பயப்படாதபடி நடக்கவேண்டும்.

சுயநயமென்பது உலகத்தை யாளுகின்றது, ஆதலின் ஆண்பிள்ளைகளிடமிருந்து நன்மையையும், இவ்விதத் தீச்செயல்களின் சீர்திருத்தத்துக்கு வேண்டிய வழிகளையும், எதிர்பாராமல், இதுவிஷயத்தில் முயற்சி எடுத்து உழைக்கவேண்டுவது, நம்தேயத்தில் பிறந்து வளர்ந்து, சற்றுத்தேர்ந்துள்ள வித்துவச்சிகாமணிகளாகிய பெண்களின் பெருங்கடமையேயாம்.

☞ வி. எம். சுப்பய்யாபிள்ளை, பி-ஏ.

கமலாலயம்.

இக்கதைபடிக்கும் மஹாஜனங்களே! நான் ஆதியில் உங்களுக்கு வாக்களித்தபடியே சபை மெம்பர்களையே பேசச்சொன்னேனே; ஒழிய என்னுடைய வீண்வார்த்தைகளைக் கூடியமட்டில் அடக்கிவிட்டேன் பார்த்தீர்களா? போன வெள்ளிக்கிழமைதினம் ஏற்படுத்திக் கொண்டமாதிரியே மாதர்கள் அனைவரும் வந்து கொண்டிருக்கின்றனர். நானும்லக்ஷணமாய் வீட்டு வீதியில் காத்துக் கொண்டிருக்கிறேன். சபைஇன்னும் கூடவில்லை. எல்லாரும் சற்று உரக்கப் பேசிக்கொண்டும் சிரித்துக்கொண்டும் இருக்கின்றனர். மணியும் 3 ஆகப்போகின்றது. ஞானம்பாள் அடிக்கடி ஜன்னலில் பார்க்கிறாள்!! நானும் வண்டியைக் காணோம்தாயே" என்கிறேன்.

அதோவண்டியும் வருகின்றது; 'வண்டிவந்து விட்டது; வண்டிவந்துவிட்டது, என்று எல்லாரும் சொல்லுகின்றனர். வண்டி கமலாலயம் வந்து நின்றதும் குதித்தான் கீழேமாணிக்க நாயக்கன். வண்டியின் கதவைத்திறந்து படிகளை நேராய் வைக்க, கம்பீரமாய் கீழே இறங்கினாள் ருக்மணியம்மாள்!

உள்ளே நுழையுமுன்பே ஞானம் வாசற்படியண்டை வந்து "வாருங்கள். அம்மா! வரவேண்டும்!!" என— ருக்மணி "சற்று நேரம் ஆய்விட்டது. வழியில் குதிரை இடக்குச் செய்தபடியால் நாழிகை ஆய்விட்டது. எல்லாரும் எனக்காகக் காத்திருக்கிறார்கள்போல் இருக்கிறது. எனக்கு, இப்படி செய்து விட்டேனே என்று, வெட்கமாயிருக்கிறது" என—ஞானம் "நம்மால் ஆகாத காரியத்துக்கு நாம் என்ன செய்யக்கூடும்? உங்களால் என்னபிசகு? மேலும், அதிக நாழிகை ஆய்விடவில்லையே" என்றுபேசிக்கொண்டே உள்ளே நுழைய எல்லாரும் சந்தோஷத்துடன் "வரவேண்டும்; வரவேண்டும்" என்று உபசரிக்க,சாவித்திரி "ருக்மணி! வா அம்மா, இப்படிவந்து உட்கார்ந்து சந்தனம் பூசிக்கொண்டு பூவைத்துக்கொள்" என்று புஷ்பத்தட்டையும், சந்தனக்கிண்ணியையும் கொடுத்தாள். ருக்மணி அதிக திருப்தியுடன் சந்தனமணிந்து பூவைத்துக்கொண்டு பலருடன் தாம்பூலம தரித்துக்கொண்டாள்.

மீனாம்பிகை "அக்கா (ஞானாம்பிகையை அக்காள்முறை இல்லாவிட்டாலும் மரியாதைக்காக அக்காள் என்கிறாள்) கதை படிக்கலாமே" என்ன ஞானாம்பிகை "ஆக்ஷேபணையென்ன, ருக்மணியம்மாள் தயவு உண்டானால் உடனே ஆரம்பிக்கவேண்டியது தான்" ருக்மணி "அதற்கென்ன இதோ தயாராயிருக்கிறது" என்று ஒரு காகிதச்சுருளை எடுத்துப்படிக்கத் தொடங்கினாள்.

2. அனாதிப்பிள்ளை லண்டன்மாநகருக்கு அதிகாரியான கதை.

ருக்மணி:—போனவாரத்தில் ஞானாம்பாள் சுமார் 1000 வருஷத்துக்கு முன் நடந்த ஆங்கிலேய சரித்திர சம்பந்தமான அல்பிரேட் மஹா ராஜனுடைய கதையைப்பற்றி வாசித்தாள். இன்று நான் சொல்லப்போகிற சிறுவனுடைய வாழ் நாள் அதற்குச்சற்று ஏறக்குறைய, 100-வருஷத்துக்குப் பிற்பட்டது.

சுமார் 900 வருஷத்துக்கு முன் இங்கிலாந்து தேசத்தில் மூன்றாவது எட்வர்ட் என்று ஒரு அரசன் (1327—1377) இராஜ்ய பரிபாலனம் செய்து வந்தார். அவர் காலத்தில் இங்கிலாந்து தேசத்தில் ஒரு பட்டிக்காட்டில் ரிச்சார்ட் விட்டிங்டன் என்று ஒரு சிறுவன் இருந்தான். அவனது இளம்பிராயத்திலேயே அவனுடைய தாயும் தந்தையும் இறந்துவிட்டனர். இளம்பிராயமான படியால் வேலைசெய்து சம்பாதித்துச் சாப்பிட சக்தியற்றவனாய் இருந்தான். இவ்வாறு கஷ்டப்படும் சிறுவனைப்பார்த்து அவ்வூரில் இருந்த ஒரு ஏழைக்கிழவி அவனிடம் அன்புகூர்ந்து அவனைத் தன்வீட்டுக்கு அழைத்துச்சென்று தன் மகன்போலவே வளர்த்துவந்தாள்.

அக்கிழவி மஹா நல்லவள் தினமும் ரிச்சர்ட்டுக்குத் தக்கபடி நற்புத்தி கூறுவாள். மூன்று வேளைகளிலும் தக்கபடி கடவுளைத் தொழும்படி போதிப்பாள். சோம்பல் இல்லாமல் எப்பொழுதும் குழந்தை வேலைசெய்துகொண்டு இருக்கும்படி அவனுக்குத் தக்கவேலையைக் கொடுத்து அதைச்செய்யும்படி வற்புறுத்துவாள். இவ்விதமாய் நல்வழியில் நடத்தவே, டிக்—டிக் என்பது ரிச்சார்ட் என்பதற்குச் செல்லப்பெயர்—சுறுசுறுப்பு, உண்மை, நற்குணம், யோக்கியம், கீழ்ப்படிதல், கருணை—ஆகிய இக்குணங்கள பிடிபட்டு, தன்னை வளர்த்திய செவிலித்தாயான கிழவிமட்டு மன்று—கிராமத்திலேயே எல்லாரும், நேசிக்கும்படியாய் மிகச்சிறந்த பிள்ளையானான். இக்குணத்துடன் சதா வேலைசெய்து கொண்டிருப்பதுபற்றி சிறுவனுடைய தேகம் வலிமையடைந்தது. பரந்தமார்பும், உயர்ந்ததோளும், நிமிர்ந்த நெற்றியும், ரோஜாப்பூவின்

நிறத்தைப்பெற்ற கன்னங்களும், அவனுடைய தேக சௌக்கியத்தையும் கவலையற்ற மனத்தையும் வெளியிட்டன. இருப்பினும் சிறுவனுக்கு வயது 14 ஆனவுடனே இவனுடைய செவிலித்தாயான கிழவிக்கு காலம் ஆய்விட்டது.

டிக்கினுடைய துர் அதிர்ஷ்டத்தால் மறுபடியும் அவனுக்கு சாப்பாட்டுக்கு வழியில்லாமல் போய்விட்டது. இனி டிக்வேலைசெய்தே தான் பிழைக்க வேண்டியது! மற்றவழி யொன்றுமில்லை. ஆனால் விட்டிங்டனே புத்திசாலி. இயற்கையாய் அறிவுமிகுந்தவன். மேலும் பலரிடத்திலும்கேட்டு ஒவ்வொரு விஷயத்தையும் நன்ருய் அறியவேண்டுமென்ற தாகமுடையவன். ஆகையால் யாரிடத்தில் போனால் உபயோகமுள்ள விஷயங்களைத் தனக்குச் சொல்லிக் கொடுப்பார்கள் என்பதையும் யாரிடமிருந்து தனக்குத் தெரியாதவற்றைத் தெரிந்து கொள்ளலாமென்பதையும் டிக்கு நன்ருய் அறிவான். பலநாட்களில் அவன் லண்டன் மாநகரைப்பற்றிக் கேட்டதுண்டு. சிலர் அவனிடம் அப்பட்டணத்தைப் பற்றி மஹா விசித்திரமான விஷயங்களைச் சொல்லியிருந்தார்கள். அவைகள் சற்றும் உண்மையே இல்லாத, வெறும் பொய்யாய் இருந்துங்கூட குழந்தை விட்டிங்டன் அவற்றையெல்லாம் மெய்யென்று நம்பினான். சிலர் லண்டன் பட்டணத்துத் தெருவெல்லாம் தங்க மிழைத்து இருக்கும் என்பார்கள். சிலர் அவ்விடத்து ஜனங்கள் உபயோகிப்பது எல்லாம் பொன் வெள்ளிதவிர மற்ற உலோகமே கிடையாது என்பார்கள். சிலர் அவ்விடத்தில் இருக்கும் ஜனங்கள் எல்லாம் பிரபுக்களே தவிர ஏழை யென்பதே கிடையாது என்பார்கள். இவ்வாறு பட்டிக்காட்டார் பலவிதமாய் லண்டனைப்பற்றி வியந்து கூறுவதை அடிக்கடி கேட்டிருந்ததுபற்றி அம்மா க்ஷிமை பொருந்திய பட்டணத்தைத் தான் போய் பார்க்க வேண்டுமென்ற ஆசை டிக்குக்கு இருந்துகொண்டிருந்தது. தற்காலத்தில் தனக்கு உதவிசெய்பவர் யாரும் இல்லாமல் போகவே, "இந்தப் பட்டிக்காட்டில் இருந்து கஷ்டப்படுவதைவிட பட்டணம் சேர்ந்து, அவ்விடத்தில் ஏதாவது ஒரு வேலை கிடைத்தால் சுகமாய் காலக்ஷேபம் செய்யலாமே" என்று எண்ணினான்.

பாரதஸ்திரீ மகா மண்டலம்.

பாரத ஸ்திரீ மகாமண்டலத்தின் நோக்கங்களை என்ன விதமாய் நிறைவேற்றுகிற தென்பதைப்பற்றி, மிஸ்ஸஸ் சாரளாதேவி சௌத்ராணி ஓர் அற்புதமான பிரசங்கம் பின்வருமாறு செய்தார்:—

"தொட்டிலை ஆட்டுகிறவள் உலகத்தை ஆளுவாள்". அதாவது, குழந்தைகளை வளர்க்கும் ஸ்திரீயானவள் அந்தக் குழந்தைகளின் குணாகுணத்துக்குப் பொறுப்பாளியாயிருந்து, பிறகு அந்தக்குழந்தைகள் பெரிய மனுஷராகி உலகத்து விவகாரங்களில் பங்கு பெற்றுத் தேச நிர்வாகத்தை நடத்துகிறபடியால், தொட்டிலை யாட்டுகிறவள் உலகத்தை யாளுவாளென்று சொல்லப்படுகிறது. ஹிந்துக்கள் தங்கள் தேசத்தையும் தங்கள் ஜனத்தையும் கடவுளுக்கு விசேஷப் பிரியமுள்ளனவாகக் கருதுகிறார்கள். வெகு காலம் வரையில் ஹிந்துக்களின் சரித்திரம் அப்படியே இருந்தது. பிறகு, நாம் தூக்கத்தில் அமிழ்ந்து, நமது குணங்களையும் சக்திகளையும் மறந்து, பிரக்ஞை தவறிப் போய் விட்டோம். ஸ்திரீகள் தங்கள் கடமைகளை மறந்து, கேவலம் புருஷனின் சுகத்துக்குக் கருவியாகக் கருதப்படுகிறார்களேயன்றி, அவர்கள் சுபா

வத்திற்கும் திறமைக்கும் தகுந்தபடி உயரத்தப்பட்டுப் பெருங் காரியங்கள் செய்ய வல்லவர்களாயில்லை. ஒரு ஹிந்துக் குடும்பத்தில் ஆண்பிள்ளை பிறந்தால், அந்தப் பிறப்பினுல் அந்ததினம் விசேஷ தினமாகக் கொண்டாடப் படுகிறது. பெண் பிரஜை உற்பத்தியானுல், அந்தத்தினம் அப்படிக்கொண்டாடப்படாமல் விசேஷம் ஏனவும் நடக்காததுபோல் பாவிக்கப்படுகிறது. உண்மையில், ஸ்திரீ பிரஜை யுண்டானுல், அந்தக் குடும்பத்தில் விக்டோரியா ராணியாரைப்போல கையில் செங்கோலும் தலையில் மகுடமும் தரித்து, தேசத்தை யாளுகிறவள் பிறந்ததுபோலப் பாவிக்கவேண்டியதுபோய், அன்றையதினம் நல்ல சகுனமில்லாத தினமாகப் பாவிக்கப்படுகிறது. இப்படி ஹிந்து ஸ்திரீகள் இந்த நிலைமையிலிருப்பதை யொழித்து, தங்களுடைய கடமையையும் தங்கள் ஜனத்தார் சேர்ந்து செய்யக்கூடிய கடமையையும் பற்றிச் சிந்தித்து, தங்கள் பூரணமான சக்தியை அறியவேண்டும். பாரத ஸ்திரீ மகா ம்ண்டலமும் தனியாயுள்ள ஸ்திரீகளும் நமது சரீரத்தில் நரம்பும் சதையும் போலாவார்கள். அதாவது, மகா மண்டலம் பெரிய காரியங்களை யறிந்து, அதன் மூலமாக அவைகள் அங்கங்குள்ள தனியான ஸ்திரீகளுக்கு எட்ட, அவர்கள் அந்தப் பெருங் காரியங்களைச் செய்து முடிக்க வேண்டும். ஆகையால், பாரதஸ்திரீ மகாமண்டலத்தைப்போல் பல சங்கங்கள் அங்கங்கே ஸ்தாபிக்கப்பட்டு, ஸ்தலசங்கங்களும் பொதுச் சங்கங்களுமாய் ஒன்று சேர்ந்து வேலை செய்து, இந்திய ஸ்திரீகள் தங்கள் தேச நன்மைக் குற்ற காரியங்களைச் செய்து முடிக்கவேண்டும்.

இதுவரையில் இந்திய ஸ்திரீகள் தனித்தனியே பிரிந்திருந்தார்கள். இப்போது ஒன்றுய்ச்சேர மார்க்கங்கள் அதிகரித்து விட்டபடியால், ஓரிடத்தில் ஒன்று சேர்ந்து ஒருவருக்கொருவர் அறிமுகம் செய்துகொண்டு ஒருவர் அறிந்ததை மற்றவருக்குச் சொல்லி, எல்லோரும் ஒரு மனத்தினராய்த் தேச நன்மையை முற்படுத்துதல் சாத்தியமாகும். இப்படி இந்த மகா மண்டலமானது தேசத்தின் நானுபக்கங்களிலுமுள்ள ஸ்திரீகளை ஒன்று சேர்த்து அவர்களை நல்ல வேலைக்கு தயார் செய்யும். பாரதஸ்திரீ மகாமண்டலத்தில் ஜாதிமத வேற்றுமை இல்லாமல் எல்லா ஸதிரீகளும் ஒன்று சேரவேண்டும். லண்டனிலுளள மகாராணி யவர்களை இந்தப் பாரத ஸ்திரீ மகா மண்டலத்துக்குப் பேட்ரனெஸ் (போஷகர்)ஆகவும், அங்கங்குள்ள ராஜாத்திகள் பிரசிடெண்டுகளாகவும், மற்ற உத்தியோகஸ்தர்கள் ஜாதிவித்தியாசமில்லாமல் பற்பல வகுப்பு ஸ்திரீகளுமா யிருக்கவேண்டும். கவர்னர்களுடைய மனைவிமார்களும் மற்ற ஆங்கிலேய ஸ்திரீகளும் நம்முடன் கலந்து, நமக்குப் புத்திமதி சொல்லுகிறவர்களாயிருக்கவேண்டும். இப்படி நடத்தப்படும்சபைகளின் முக்கியமான அலுவல் ஸ்திரீகளுக்கு ஹோம் எடுகேஷன், அல்லது வீட்டுப் படிப்பி, சொல்லிவைப்பதாயிருக்கவேண்டும். இப்போது கிறிஸ்தவப் பாதிரிமார்களைச் சேர்ந்த பரோபகாரமுள்ள ஸ்திரீகள இந்த அலுவலைச்செய்து வந்தாலும், அவர்கள் நமது ஸ்திரீகளைத் தங்கள் மதத்தில் சேர்க்கப் பிரியமுள்ளவர்களா யிருப்பதுமன்றி, அன்னியர்களா யிருப்பதால் அவாகள் சொல்லுவதும் நடப்பதும் நம் ஸ்திரீகள மனதில் ஏறுவ தில்லை. ஆகையால், வீட்டுப் படிப்பைச் சொல்லி வைக்கிறவர்கள் நம் ஸ்திரீகளா யிருக்க வேண்டும். அப்படி யிருந்தால், நமது ஸ்திரீகள் பழைய காலத்து ஸ்திரீகளுடைய குணத்தைப்பெறுதல் சாத்தியமாகும். சகுந்தலையையும் அவளுடைய பிள்ளையையும் துஷ்யந்த மகாராஜா விட்டுப்பிரிந்து, பிறகு சந்தித்த காலத்தில அவர்

கள் இருவரையும் இன்னாரென்று அறியாதவனா யிருந்தபோது, சகுந்தலை அவனைப் பார்த்து, உன் மனச்சாக்ஷி உன்னைக் கண்டிக்க வில்லையாவென்றும், நீ செய்தபாவம் இன்னதென்று உனக்குத் தெரியாவிட்டாலும், எல்லாப் பூதங்களின் மனதிலும் அந்தராத்மாவாயிருக்கும் பரமேஸ்வரனுடைய வாக்கானது உனக்குச் சொல்லவில்லையா வென்றும், தைரியமாய்க்கேட்டது போல், எந்த ஹிந்து ஸ்திரீ தப்புசெய்த தன் புருஷனைப் பார்த்துக் கேட்பாள்?

ஸ்திரீ புருஷர் சம்பந்தமானது கேவலம் சரீர சுகத்துக்குரிய சம்பந்தமாகி விட்டபடியால், ஸ்திரீகள் தங்களுடைய சொந்த சுபாவத்தையும் திறமையையும் அறியாமலிருக்கிறார்கள். அவர்களுக்குக் குடும்பத்தைப் பாதுகாப்பது. முக்கிய கடமை புருஷனுக் குற்றதுணைவியா யிருப்பது மன்றிக் குழந்தைகளைச் சரியான வழிகளில் வளர்க்கவேண்டும்; வீட்டைச் சுகாதார ஒழுங்குகளுக்கு இசைந்தபடி காக்கவேண்டும்; முகத்தைத் திரையால் மூடிக்கொண்டு கெட்ட பேச்சுகள் பேசுவதும் கெட்ட பாட்டுகள் பாடுவதும் ஸ்திரீகள் மனதைக்கெடுக்கின்றது; காலதேசம் பாத்திரம் முதலியவைகளை அறியாமல் தான தருமங்கள் செய்வது ஹிந்துக்களுள் நல்ல காரியங்களின் பலனைக் குறைத்து விடுகின்றது. இந்தத் தீங்குகளெல்லாம் ஒழியுமாறு ஸ்திரீகள படித்திருக்கவேண்டும். சர்க்கார் கணக்குகளைப் பார்த்தால் ஹிந்து மகமதியப் பெண்களில் நூற்றுக்கு ஒன்றுக்குமேல் பாடசாலைக்குப் போவதாயில்லை. இதற்குப் பால விவாகமும் படுதா ஏற்பாடுமே முக்கிய காரணம். இப்படியிருப்பதால் வீட்டுப் படிப்பை விருத்தி செய்வதற்காக அங்கங்கே நிதிகள் சேர்த்து, நமது ஸ்திரீகளைப் படிப்புச்சொல்லி வைப்போராக உபயோகப் படுத்தவேண்டும்; இந்திய ஸ்திரீகளுக்காகத் தேசபாஷைகளில் புஸ்தகங்கள் எழுதிப் பிரசுரிக்கவேண்டும்; ஆங்கில பாஷையில் இருக்கும் நூல்களைத் தேசபாஷையில் மொழிபெயர்த்து எழுதவேண்டும்; நமது புராதன நூல்களையும் நம்மவர் இப்போது ஆங்கிலத்திலெழுதும் நூல்களையும் தேசபாஷையில் பெயர்த்தெழுதி, அவைகளை ஹிந்து ஸ்திரீகள் வாசிக்கும்படிச் செய்யவேண்டும். இந்த வருஷம் பாரத ஸ்திரீ மகா மண்டலம் செய்யவேண்டியது எதுவென்றால், அங்கங்கே டிப்போக்கள் ஸ்தாபித்து, இந்திய ஸ்திரீகளில் ஏழைகளானவர்கள் செய்யும் கைவேலைகளைச் சேர்த்து வைத்து விற்பனை செய்ய வேண்டும்; கடைசியாகச் செய்யவேண்டியது, ஹிந்து ஸ்திரீகளுக்கு வைத்தியம் எப்படிக் கிடைக்கின்றது? அந்த வைத்தியம் எப்படிச் சீர்ப்படுத்தப் படலாம்? அது எவ்வளவு தூரம் ஸ்திரீகளுக்கு உபயோகப்படுகின்றது? என்பதைப்பற்றிக் கவனிக்கவேண்டியது".

இவ்வாறு மிஸ்ஸெஸ்சாரளாதேவி சௌத்ராணிபேசினாரென்றால், நமது ஹிந்து ஸ்திரீகளுள் புத்திமான்களும் படித்தவர்களும் இல்லையென்று என்ன விதமாய்ச்சொல்லக்கூடும்? இவர் தமதுபிரசங்கத்தில இவ்வளவு புத்திசாலித்தனமாய்ச் சொன்னதெல்லாம் நிறைவேறாவிட்டாலும், தாம் மிகுந்த ஆலோசனைசெய்து விவேகத்துடன் சொல்லியிருக்கிறாரென்பதில் தடையில்லை. இவரைப்போல் நமது தேசத்தில் அங்கங்கே புத்திமான்களான ஸ்திரீகள் படிப்புள்ளவர்களாய் முன்னுக்கு வந்து, தங்கள் இனத்தாருக்குப் பிரசங்கங்கள் செய்வார்களானால், நம்தேசத்தின் நிலைமை சீர்திருந்த வெகுகாலம் செல்லாது." "சுதேசமித்திரன்"

சர்வஜித்.

39-வது அத்தியாயம்.

முகுந்தனும் கோபாலும் ஸர்வஜித்தின் அநுகூலத்தை யுத்தேசித்து மலைக் கோட்டைக்குள் பிரவேசிக்கும் சாயந்தரவேளையில் அனந்தகிரியில் வேறொரு விஷயம் நடந்து கொண்டிருந்தது. நியாயசபையோரால் ஸர்வஜித் இரவு 12மணிக்குத் தூக்கிடப்பட வேண்டுமென்று தீர்மானஞ் செய்யப் பட்டிருந்ததால் அதற்கு முந்தியே அவன்செய்துகொள்ள வேண்டியபிராயச் சித்தத்திற்கும், அவன் தான் செய்த குற்றங்களை இரகசியமாய் ஒளிக்காமல் வெளியிட்டுக் கொள்வதற்கும், மற்றும் பரலோகத்தைக் குறித்தே இனி அவனது எண்ணங்களைச் செலுத்த வேண்டுவதற்கும், பக்கத்து மடத்திலுள்ள யதிகளில் ஒருவராகிய நித்யாநந்த ரென்பவரை அனுப்பினார்கள். இவருக்கு இப்போது வயது அறுபது இருக்கலாம். இவர் தெய்வபக்தி, விசுவாசம் நிறைந் திருந்ததோடுங்கூட, பரோபகாரம், அன்பு என்னும் குணங்களே உருவாகக் கொண்டவர். நிர்மலமானஹிருதயமுள்ளவர்; எவரையும் அவதூறு சொல்லுகிறதென்ற தொழிலேயே கைக்கொண்டவர்கள்கூட இவரைப் பற்றி விகற்பமாக ஒன்றுஞ் சொன்னதேயில்லை. வித்தையிலோ நிகரற்றவர்; இவருக்கு கேவலம் சமயவிஷயங்கள் மாத்திரம் தெரிந்ததல்ல; லௌகிக விஷயங்களையும் இயற்கைப் பொருள்களின் குணங்களைக் குறித்தும் ஆழ்ந்த ஞானமுள்ளவர். இவர் பேசத்தொடங்கினால் யாவரும் இமைகொட்டாமல் கேட்டுக்கொண்டிருப்பார்கள். ஆயினும்,மகாசாது; அஹங்காரமென்பதையே அறியாதவர்.

இவர் மற்றுஞ் சில யதிகளோடு அனந்த கிரிக்கோட்டையையடைந்ததும் பிரபு அநங்கனே நேரேவந்து அவரை மரியாதையுடன் வரவேற்றி, முதலில் அவரை போஜன மண்டபத்திற் கிட்டுக் கொண்டுபோய் அவருக்குஆஹாராதிகள் கொடுத்து உபசரித்தான். இவர்கள் கடைசியாக சந்தித்தது முதல் இதுவரைக்கும் வருஷங்களுக்கு மேல்வருஷங்களாய்விட்டன; அக்காலத்தில் பிரபு அநங்கன் சிறு பிராயமுள்ளவனாய் அனந்தகிரியிலேயே இருந்தான். ஆயினும் அப்போதுங்கூட நித்தியா னந்தருக்கும் அநங்கனுக்கு முள்ளபரிச்சயம் மிகக்குறைவுதான். கர்வமுள்ள பிரபுவின் மகனும் சாந்தமுளளயதியும் அடிக்கடி சந்தித்துக் கொள்ள ஹேதுக்களில்லை. ஆயினும் அவர்களுக்கிருந்த ஸ்வல்ப பரிச்சியத்திலிருந்து ஒருவருக் கொருவர் அன்பு பாராட்டியதாகத் தெரியவில்லை. பிரபு அநங்கன் நிதயாநந்தரை தனக்குக்காரணந்தெரியாமலே வெறுத்தான்; இப்படி உலகத்தில் கெட்டவர்கள் நல்லவர்களைக் கண்டு ஒரு நியாயமுமில்லாமல் வெறுப்புக் கொள்ளுதல் சகஜம். ஆயினும் இப்போது பிரபு அநங்கன் அவரை மிக மரியாதையாய் உபசரித்தான். அவர் திராக்ஷ ரசத்தை விரலாற் கூட தொடாததைப் பார்த்து "பெரியவரே, தாங்கள் திராக்ஷாரசபானஞ் செய்யவில்லையே" என்று அநங்கன் வினவ, அவர் "நான் இம்மடத்தில்வந்தது முதல், இவ்வைம்பது வருஷகாலமாய் நான் திராக்ஷ ரசத்தைப் பருகினதேயில்லை" என்றார்.

"தாங்கள் அதிக காயக்கிலேசம் செய்து வந்திருக்கிறீர்கள்"

"அப்படியுமில்லை; எனக்குப் பத்து வயதாயிருக்கையில் என் தாயார் சிவலோகஞ் சென்றாள்; இது நடந்த சிலமாதங்களுக்குள் அதேபதவியை என் தகப்பனார் அடைந்தார். அவர் உயிர் துறக்குஞ்சமயத்தில் திராக்ஷாரச பானத்தை விலக்குப்படி எனக்கு புத்திசொன்னார்; அவ்வாக்ஞையைத்தான் இது வரையில் நிறைவேற்றிக்கொண்டு வந்திருக்கிறேன். இதனால் மிதமாய்ப் பானஞ் செய்கிறவர்களை நான் குறைவாக நினைக்கிறதில்லை."

"பத்து வயதிலேயே இம்மடத்திற் சேர்ந்தீர்களா என்ன?"

"ஆம், இந்த பரிசுத்தமான இடத்தில் வந்து வருஷங்கள் ஐம்பதாகின்றன. இந்த ஐம்பது வருஷங்களாக ஒப்பற்ற பெரியோர்களோடு சத்காலக்ஷேபஞ் செய்துகொண்டு வந்திருக்கிறேன். இவ்விடத்தைத் தவிர எனக்குச் சிறந்த இடம் வேறொன்றுமில்லை. எனது காயமும் இங்குதான் அடக்கஞ் செய்யப்படும்."

"தங்களுடைய காலமும் யாதொரு மனக்குறைவின்றி நடந்து வந்திருக்கிறதாகத் தெரிகிறது."

"முழுவதும் அப்படியுஞ் சொல்லமுடியாது. யதிகளுங் கூட சுகதுக்கங்களுக்குட் பட்டிருக்கிறார்கள். பல யதிகள் கூடுகிற இடத்தில் ஒருவருக்கொருவர் அளவற்ற சிநேக பாவத்தை யடைகிறார்கள். ஒரே வயிற்றிற் பிறந்த சகோதரர்கள் போல இருக்கும்போது, அந்தகன் தனது கடமையைச் செலுத்துகிறான். இதனால் மஹா ஆப்த சிநேகிதர்கள் பிரிக்கப்படுகிறார்கள். அப்பொழுது துக்கமில்லையென்று சொல்ல முடியுமா?" என்று விசனத்தால் உண்டாகும் தழுதழுத்த குரலோடு சொன்னார்.

மற்ற யதிகளிலொருவர், "நித்யானந்தரே! இதைக்குறித்து நாம் இனிப் பேசவேண்டாம். இது உமது துக்கத்தைக் கிளறிவிடுகிறது" என்றார்.

"உண்மைதான். எனக்குத் தெரியாமலே விசனம் வந்து விட்டது. நீங்கள் எல்லோரும் இங்குதானே இருங்கள். நான் கைதியைப் பார்க்கப் போகிறேன்."

இப்படி சொல்லிவிட்டு நித்யானந்தர் அவ்விடம் விட்டகன்றார். அங்கிருந்த ஜில்லா அதிகாரி நித்யானந்தரோடு பேசிய யதியைப் பார்த்து, "பெரியவரே, நித்யானந்தர் மகா ஆப்தசிநேகிதரொருவரை இழந்து விட்டாரோ? என்று கேட்க, யதியானவர் "ஆமாம்" என்றார். அவ்விஷயத்தை யறிய வேண்டுமென்று ஜில்லா அதிகாரி அதிக அவாக்கொள்ளவே, யதியானவர் பின் வருமாறு சொல்வாராயினார்:—

"நித்யானந்தர் தனது வாழ்நாட்களில் கிட்டத்தட்ட முழுவதையும் இம்மடத்திலேயே போக்கி வந்து விட்டதாகக் கேட்டீர்கள். பத்து வயதில் இவ்விடத்தில் பிரவேசித்தார். பதினெட்டு வயதில் சன்யாசியாச்சிரமத்தைக் கைக்கொண்டார். அதேகாலத்தில் இவருக்குச் சமமான ஒரு புதிய சிறுவன் மடத்தில் சேர்க்கப்பட்டான். அவன் பூர்வாச்சிரமப் பெயர் வித்யா

பூஷணன். அவனும் சந்நியாசியாச்சிரமத்தை யடைந்து பிரும்மானந்தனென்று பெயர் பூண்டான். நித்யாநந்தருக்கும் பிரும்மானந்தருக்கும் அத்யந்த சிநேகமுண்டாய் விட்டது. அப்படியவர்கள் சிநேகபாவத்தை யடைந்தது ஆச்சரியமல்ல; இருவரும் குணத்தில் ஒத்தவர்கள். அவர்கள் எப்போதும் ஒருமிக்கப் படிப்பார்கள்; பக்கத்துப் பிரதேசத்திலுள்ள நோயாளிகளையும், தளர்ச்சி யடைந்தவர்களையும், வயோதியர்களையும் தனித்தனியே காணப் போகும் நேரங்களைத்தவிர மற்றப்பொழுதெல்லாம், ஒருங்கே தான் இருப்பார்கள்- வயதாக வயதாக இவர்களது பரஸ்பர சிநேக பாவம் அதிகரித்ததேயொழிய குன்றவில்லை.

இப்படி இருவர்களும் சந்தோஷமாய் காலத்தைப்போக்கி வரும் நாளில், ஒரு நாள் இரவு நித்யாநந்தர் தூக்கத்திலிருந்து எழுப்பப்பட்டார். கண்களை விழித்து எரிந்துகொண்டிருந்த விளக்கின் பிரகாசத்தைக்கொண்டு பார்க்கும்போது, படுக்கைக் கட்டிலண்டையில் நின்றுகொண்டிருந்தது பிரும்மாநந்தரென்பதைக் கண்டார். நின்றுகொண்டிருந்தவருடைய முகமோ பிரேத முகம்போல் பயங்கரமாய் வெளுத்திருந்தது; அவருடைய தேகம் நடுங்கிக் கொண்டிருந்தது. இதைக்கண்ட நித்யாநந்தர் படுக்கையிலிருந்து தாவியெழுந்து, பிரும்மாநந்தரைப்பார்த்து "யாது சங்கதி" யென்று வினவினார். அதற்கவர் 'எனதருமை நண்பனே; நான் இப்போது பயங்கரமான தரிசனத்தைக் கண்டேன். நான் எனது மரணம் சமீபித்து விட்டதென்பதையும், நான் கொடுமையாக சாகப்போகிறேனென்பதையும் கண்டுகொண்டேன்' என்றார்.

இதைக்கேட்ட நித்யாநந்தர் 'இதென்ன நீ இப்படி! கனவுகண்டு மயங்குகிறாய்? முப்பத்தாறுவது வயதிலிருக்கிற உனக்கு மரணமேற்பட பல வருஷங்கள் செல்லும். நீ அனுவசியமாக பயப்படாதே" என்றார். இதனால் பிரும்மாநந்தர் மனத்தேர்ச்சியை யடையவில்லை. "நான் கண்டது கனவல்ல; பயங்கரமான உண்மையே; அதைக்குறித்து எனக்குச் சந்தேகமில்லை; நான் இதோ தெரிகிற மலைப்பாறைகளில் இறக்கப்போகிறேன். அத்துடன் மாத்திரமல்ல; என்னைக்கொல்லப் போகிறவனுடைய உருவத்தையும கண்டுவிட்டேன்" என்றார். அம்மனிதன் யாரென்று நித்யாநந்தர் கேட்க, அம்மனிதனை தான் இதுவரையில் சந்திக்கவில்லையென்று சொல்லவே, நித்யாநந்தர் "உனக்கு சத்துரு என்று சொல்லக்கூடியவன் உலகில் ஒருவருமில்லாதிருக்க, உன்னை யார் கொல்லப்போகிறான்?" என்றார்.

"அதென்னமோ எனக்குத் தெரியாது; நான் கண்டதை உனக்கு எடுத்துரைக்கிறேன். நான் ஒருவிஷயத்தைக் குறித்து உன்னைக் கேட்டுக்கொள்ளுகிறேன். நான் இறக்கப்போகிறது நிச்சயம்; நீ எனக்குப்பிறகு வெகுகாலங் கழித்து இறப்பாயென்று எண்ணிக்கொண்டிருக்கிறேன். ஆனால் ஈசுவர சங்கல்பத்தில் எப்படி நடக்குமோ? ஆகையால் எவன் முதலில் இறந்தாலும் அவன் (இறந்தவர்கள் பூத ரூபங்களாக சிலகாலம் இருக்கிறார்கள் என்பது உண்மையாயின்) மற்றவனுக்குத் தோன்றி இறந்தபிறகு இருக்கும் நிலைமையைத் தெரிவிக்கவேண்டியது' என்றான். இவ்வளவு விநோதமான வேண்டுகோளைக்கேட்ட நித்யாநந்தர் ஒருக்கால் மற்றவர் புத்திமாறாட்டத்தை யடைந்து விட்டாரோவென்று திகைத்தார். ஆயினும், பிரும்மாநந்தரை சமாதானஞ்செய்வதற்கு வேறு வழியில்லையென்பதைக்கண்டு, அப்படியே செய்ய

லாமென்று சொன்னார். மற்றவரும் இம்மறுமொழியால் ஒரு பெரும்பாரம் நீங்கினவர்போல், "உன் மறுமொழி என் மனதிற்கு அமிருத வர்ஷம்போலிருக்கிறது. இனி எனக்கு யாதொரு குறைவுமில்லை" யென்று சொல்லிக் கொண்டு படுக்கச் சென்றுவிட்டார்.

ஆயினும் பிரும்மாநந்தருடைய சித்தம் சரியான நிலையில் இருக்கிறதோ வென்று தான் இருந்தான். ஆயினும், மறுநாள் காலமே பிரும்மாநந்தரைப் பார்க்கையில் யாதொரு குறைவுமில்லாதவராகக் காணப்பட்டதோடுகூட சந்தோஷமுள்ளவராகவே இருந்தார். இப்படி சில வாரங்கள் சென்றன. இப்படியிருக்க, ஒருநாள் காலமே பிரும்மாநந்தர் மடத்தைவிட்டு பரோபகார கைங்கரியமாக வெளியிட்டுச் செல்லுகையில் மலைச்சாரலில் ஒரு பக்கத்தில் மெத்த மனக்கலக்கத்திலிருந்த ஒரு ஸ்திரீயைக் கண்டார். அவள் அதிசௌந்தர்யமுள்ளவள்; அவளது உடை அதிக நீண்டபிரயாணத்தால் அழுக்கடைந்திருந்தபோதிலும், விலையுயர்ந்ததா யிருந்தது. அவள் ஒரு நகரவாசியெனக் காணப்பட்டாள். அவள் பெருந்துயரத்தி லிருந்ததைக்கண்டு பிரும்மாநந்தர் அவளைச் சாந்தப்படுத்த வென்றெண்ணி அவளது ஊர்பெயர் யோகக்ஷேமங்களை வினவ, அவள் யாதொன்றுக்கும் சரியான மறுமொழி பகரவில்லை.

ஆயினும், மனந்தளராமல் இனிய சொற்களால் அவள் மனது இளகும்படி கேட்க, சில விஷயங்களை யறிந்துகொண்டார். அதாவது அவள் பிறந்து வளர்ந்தது அமராபுரி யென்றும், அவளை யாரோ பிரபுகுலத்தில் பிறந்தவன் கெடுத்து கைவிட்டுவிட்டு ஓடிப்போய் விட்டானென்றும், அவன் செய்த காரியத்திற்கு அவனை எப்படியாகிலும் கண்டுபிடித்து பழிக்குப்பழி வாங்க வந்திருப்பதாகவுஞ் சொன்னாள். இவ்வார்த்தைகளைக் கேட்ட பிரும்மாநந்தர் மெதுவாக அவள் கொண்ட எண்ணங்களை நீக்கிவிட வேண்டுமென்றும், மலைச்சாரலிற்குப் பக்கத்தில் ஒரு குடியில்லாதவீட்டில் அவள் இஷ்டமுள்ள வரையிலும் இருக்கலாமென்றுஞ் சொல்லி, அவளது செலவுக்குக் கொஞ்சபணமும் கொடுத்து அவ்வீட்டில் அவளைக் குடிவைத்தார். அதுமுதல் பிரும்மாநந்தர் அவளை யடிக்கடி கண்டு யோக க்ஷேமங்களை விசாரிப்பது வழக்கம்.

ஒருநாள் அவள் வீட்டுக் கதவைத் திறந்து உள்ளே சென்றார். அப்போது அவள் தனியாயில்லை; அவளோடுகூட ஒருமனிதன் இருந்தான். அவன் முகத்தைத் திருப்பினான்;பிரும்மாநந்தர்நடுங்கிப்போய்விட்டார்.ஏனெனில் இவர் தரிசனத்தில் எந்தமனிதன் தன்னைக் கொல்லப்போவதாகக் கண்டாரோ அம்மனிதனே அங்கிருக்கக் கண்டார்!—"

"என்ன ஆச்சரியம்! என்ன ஆச்சரியம்!" என்றான் ஜில்லா அதிகாரி.

"ஆம், இது ஒரு பிரமிக்கச்செய்கிற கதையாகத்தான் இருக்கிறது," என்றான் அநங்கன்.

"இதில் மகா ஆச்சரியமான அம்சம் யாதென்றால், பிரும்மாநந்தர் அம்மனிதனைத் தோற்றத்தில் தவிர வேறெங்கேயும் அதற்கு முன் கண்டதில்லை. இதிலிருந்து அவர் தோற்றங்கண்டது உண்மைதானென்பது ஏற்படுகிறது," என்று ஜில்லா அதிகாரி மறுபடிசொன்னார்.

"அதைக்குறித்து யாதொரு சந்தேகமும் இருக்கமுடியாது," என்று யதி மேலே சொல்லுகிறார்:—"பிரும்மாநந்தர் தோற்றத்தைக்குறித்து ஒரு போதும் சந்தேகங்கொள்ளாதிருந்த போதிலும், இப்போது தோற்றத்தில் கண்ட மனிதனை விழித்துக் கொண்டிருக்கையில் பிரத்யக்ஷமாகப் பார்த்த தானது கண்ட தோற்றத்தின் உண்மையை உறுதிசெய்தது. தோற்றத்தில் கண்ட மனிதன் உலகத்தில் ஜீவித்திருக்கும் போது, அதே மனிதன் தன்னைக் கொல்லப்போகிறானென்பதும் நிறை வேறத்தானே வேண்டுமென் பதை நினைக்கையில் அவர் சரீரத்தில் நடுக்கமுண்டாய்விட்டது. அவரது முதல் எண்ணம் அங்குவிட்டோடி விடவேண்டு மென்றிருந்தது; ஆனால் அடுத்த நிமிஷத்திலோ எங்கு ஓடினாலும் விதியை வெல்ல எவராலும் இயலா தெனக்கருதி தைரியமாய் அவனிடஞ்சென்று 'அப்பா, நண்பனே, என்னி டத்தில் உனக்கு யாதாகிலும் விரோதம் உண்டோ?' என்றுகேட்க, அவன் ஆச்சரியத்துடன் 'பெரியவரே, தங்களிடத்தில் விரோதம் பாராட்டுவதற்கு யாதொரு நியாயமுமில்லையே; இதற்கு முன் தங்களை நான் கண்டதேயில்லை. நான் எண்ணுகிறபடி தாங்கள் பிரும்மாநந்தராயிருக்குமாகில், தங்களிடத் தில் நான் நல்ல அபிப்பிராயங் கொண்டிருக்கிறேனே ஒழிய, விரோதத்தை யடையவில்லை. ஏனெனில், இம்மனுஷி எனக்குத் தெரிவித்ததிலிருந்து நீங் கள் அவளுக்கு பரோபகாரஞ் செய்திருக்கிறதாகத் தெரிகிறது. ஆயினும் பெரியவருக்கு வணக்கஞ்செய்து நான் ஒரு வார்த்தை சொல்லவேண்டும். இனி இம்மனுஷியைக்குறித்து தாங்கள் கவலை கொள்ளவேண்டாம். அவளு க்குறியவன் அவளைக் கார்த்துக்கொள்வான். தாங்கள் இதுவரையில் செலவு செய்திருக்கக்கூடிய பணத்துக்கு அதிகயாகவே இதோ தருகிறேன்' என்று ஒரு பணப்பையை எடுத்தான்.

பிரும்மாநந்தருக்கு சிறிது கோபம் வந்துவிட்டது. 'அப்பா! உனது செய்கை எனக்கு அவ்வளவு மரியாதையாகத் தோன்றவில்லை. நாங்கள் எந்த உபகாரஞ்செய்தாலும் ஒரு பிரதிப் பிரயோசனத்தை யுத்தேசித்துச் செய் கிறதில்லை. ஆகையால் உனது பணப்பையை இருந்த இடத்திலேயே வைத் துக்கொள். ஆயினும் நான் ஒருவார்த்தை சொல்லவேண்டுவதவசியம். இம் மனுஷி எனக்குச்சொன்ன சில சங்கதியிலிருந்து யாரோ ஒரு உயர்குலத் தோன் அவளுடைய நல்ல பெயரைக் கெடுத்ததுமல்லாமல் மோசஞ்செய்து ஓடிவிட்டானென்றுந் தெரிகிறது. அவனாகவாவது அவனது ஆளாகவாவது நீ இருப்பாயாகில்—' என்று சொல்லப்போக, மற்றவன் கோபத்துடன் 'இனி இவளுக்கும் உமக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை; உமது உபதேச மும் இங்கு யாருக்கும் தேவையில்லை. இனி தாங்கள் வந்த வழியைப் பார்த் துக்கொண்டு திரும்பிப்போகலாம்' என்றான். அந்த ஸ்திரீயும் அவனுடன் சேர்ந்துகொண்டு தாங்கள் இதுவரையில் செய்துவந்திருக்கிற உபகாரத்தி ற்கு நான் தங்களுக்கு மிகவும் கடமைப்பட்டிருக்கிறேன். ஆனால் இனி என் னைக்குறித்து தாங்கள் கவலை கொள்ளவேண்டாம். தாங்கள் இனிப் போக லாம்; இனி இங்கு வரவுங் கூடாது' என்றாள். மன வருத்தத்துடன் அங்கு விட்டகன்று, மடஞ்சேர்ந்து, நடந்தன யாவற்றையும் நித்யாநந்தருக்குத் தெரிவித்தார். அவர் மூலமாய் யாவையும் நான் அறிந்துகொண்டேன்.

இப்படியிருக்க, நித்யாநந்தர் பிரும்மாநந்தரைப் பார்த்து இனி அந்த ஸ்திரீயைக்குறித்துக் கவலை கொள்ளவேண்டாமென்றும், அவள் செல்லு கிற வழி செல்லட்டுமென்றும், இவ்விஷயத்தில் பிரவேசித்தல் ஆபத்திற்

கிடமென்றுஞ் சொன்னார். ஆனால் பிரும்மாநந்தர் அவ்வார்த்தைகளுக்குச் செவிகொடாமல், அந்த ஸ்திரீயை நல்லவழிக்குக் கொண்டுவருவது தனது கடமையென்றும், கடைசியாகவாகிலும் ஒருமுறை தான் பிரயத்தனஞ் செய்து அவளைத்திருத்த உறுதிகொண்டிருப்பதாகவுஞ் சொன்னார். உடனே நித்யாநந்தர் தானும் அவருடன் வருவதாகச்சொன்னார். ஆனால் பிரும்மாநந்தரோ தானேபோய் வருவதாகவும் எக்காலத்திலும் ஈசுவர சங்கல்பம் நடந்தே தீருமென்றும், ஒன்றுக்குமஞ்ச வேண்டாமென்றுஞ் சொல்லிவிட்டு மறுநாட்காலமே அந்த மனுஷியைப் பார்க்கச்சென்றார். அன்று சாயந்தரம் திரும்பிவரவில்லை. எங்களுக்கு விசாரம் மேலிட்டுவிட்டது. இரவு முழுவதும் பகவத் பிரார்த்தனையிலேயே பொழுதைப் போக்கினோம். சூரியோதயமான வுடன் நித்யாநந்தரும், நானும், மற்றுஞ்சிலரும் அவரைத்தேடிச்சென்றோம். அந்த ஸ்திரீயின் குடிசை திறந்திருந்தது. உள்ளே ஒருவருமில்லை. பிறகு மலையேறிச்சென்றோம். ஆளுக்கொருவராக நாலாபக்கமுந் தேடுகையில் நான் செங்குத்தான ஒரு மலையடிவாரத்தின் கீழே பிரும்மாநந்தர் விழுந்து இறந்து கிடந்ததைக்கண்டேன். அவர் செங்குத்தான பாறையின் மேலேயிருந்து கீழே தள்ளப்பட்டிறந் திருக்கவேண்டும். அடங்காத துக்கத்தோடு நாங்கள் பிரேதத்தை யெடுத்துக்கொண்டுபோய் உத்தரக்கிரியைகளுடன் அடக்கஞ்செய்தோம். இத்துடன் எனது துக்ககரமான கதையும் முடிவுக்கு வந்துவிட்டது'' என்று யதி முடித்தார்.

பிரும்மாநந்தர் இறந்தபிறகு நித்யாநந்தருக்குத் தோன்றி, ஒப்பந்தத்தை நிறைவேற்றினாரா?'' என்று ஜில்லா அதிகாரிகேட்டார்.

"எனக்குத்தெரிந்தமட்டும் இல்லை; அப்படி நடந்திருக்குமானால் நித்யாநந்தர் அதை என்னிடம் சொல்லாமலிரார்'' என்றார் யதி.

இப்படி பேசிக்கொண்டிருக்கும் போதே பிரபு புஷ்யமித்திருடைய வருகை தெரிவிக்கப்பட்டது.

40-வது அத்தியாயம்.

அறையிற்புகுந்த முகுந்தனுக்கும் கோபாலனுக்கும் கண்களிற்பட்ட முதற்பொருள் பிரபு அங்கனது கடிதம்.

மேஜையில் திராக்ஷாரசம் நிறைந்த பல பெருங்குப்பிகள் இருந்தன. சகோதாரிருவரும் அதிதிகளை உட்காரச் சொல்லி கிண்ணங்களில் திராக்ஷரசத்தை நிரப்பி முகுந்தனது கானத்தை எதிர் பார்த்து நின்றார்கள்.

உடனே முகுந்தனும் ஒரு கடும்போரை வர்ணித்துப் பாடினன். இப் பாட்டினால் மலையதிபதிகளுக்குண்டான குதூகலத்தை எடுத்து வர்ணிக்கவும் வேண்டுமா? கானத்தைக்கேட்டு ஆநந்திப்பதோடு மாத்திரம் அவர்கள் நிற்கவில்லை. அவ்வாநந்தத்தைப் பெருக்கவென்றெண்ணி இடைவிடாமல் கிண்ணங்களைநிறப்புவதும் குடிப்பதுமாயிருந்தார்கள். இப்படி குடித்துக்கொண்டு கேட்டுக்கொண்டிருந்ததின் முடிவு என்னவாயிற்றென்றால், முதலில் ஆநந்த நித்திரையிலும் பிறகு முற்றிலும் பிரக்ஞையற்ற நித்திரையிலும் ஆழ்ந்து விட்டார்கள். பேச்சு மூச்சற்றவர்களைப் போலாய்விட்டார்கள். நாற்காலிகளில் சாய்ந்தபடியே தலைகள் தொங்கிவிட்டன.

இதைப்பார்த்த முகுந்தன் கோபாலனைப்பார்த்து "இனி நமது காரியம் கைகூடிவிட்டது. இந்நித்திரையிலிருந்து இவர்கள் இன்னும் இருபத்திநான்கு

மணிகளுக்கிடையில் எழுந்திருக்கமாட்டார்கள்" என்று சொல்லிக்கொண்டே மேஜையிலிருந்த பத்திரத்தை யெடுத்து சட்டைப்பையில் போட்டுக்கொண்டான். அங்குவிட்டு இருவர்களும் சந்தடிசெய்யாமல் ஒரு விளக்கையெடுத்துக்கொண்டு வெளியேபோய் சிறு கோவிலுக்குட் புகுந்தார்கள். அது வழியாகத்தான் ஒரு கதவைத்திறந்து கைதியறைக்குச் செல்லவேண்டியதாயிருந்தது; அக்கதவைத் திறப்பதற்கு பூமியில் மறைக்கப்பட்டிருந்த ஒரு பொறியை (Spring) அழுத்தவேண்டுமென்றும் கேழ்விப்பட்டிருந்தார்கள். அதைத் தேட இருவரும் ஆரம்பித்தார்கள். பத்து நிமிஷங்கள் தேடியும் அகப்படவில்லை; உடனே கோபாலனது ஹிருதயம் படபடவென்று அடித்துக் கொள்ள வாரம்பித்தது. மேலும் பத்து நிமிஷங்கள் சென்றன; பிரயோசனப்படவில்லை. இது வரையிலும் மனந்தளராதிருந்த முகுந்தனும் திகிலடைந்தான். என்ன செய்வதென்று தெரியவில்லை; ஒவ்வொரு நிமிஷமும் ஒருயுகமாயிருந்தது; தவிரவும் தாங்கள் கொண்ட காரியத்தை நடுநிசிக்கு முந்தி முடித்தால் தான் ஸர்வஜித் காப்பாற்றப்படுவான். இல்லாவிட்டால் எல்லாம் வீணாய்விடும்.

ஐயோ! என்னசெய்வது? அவர்களிருந்த நிலைமையில் ஆட்கள் தங்களை நோக்கி ஓடிவருவதாக பிராந்தி கொண்டார்கள். விளக்கின் ஜ்வாலை அசைந்து சுவற்றில் நிழல் தட்டுவதை ஆட்களின் நிழலென்று அடிக்கடி பயந்து நிமிர்ந்து பார்ப்பார்கள்.

இப்படியிருக்க தெய்வவசத்தால் பதினைந்து நிமிஷங்கள் செல்ல, அவர்கள் ஆவலுடன் தேடிய பொறியும் கண்ணிலகப்பட்டது. உடனே கோபாலன் அதைக் கையாலமுத்தவே, கதவு மெதுவாய் திறந்தது. அடுத்த நிமிஷம் இருவரும் மச்சுப்படியிலிறங்கி விட்டார்கள். கீழ்போய்ச் சேர்ந்தார்கள்; இவர்கள் போய்ச் சேர்ந்தவுடன் இவர்களுடைய பெயர்கள் குதூகலத்துடன் கூப்பிடப்பட்டன. தாங்கள் யாரைத்தேடிக்கொண்டு வந்தார்களோ அவன் கூட்டிலடைபட்டிருந்தான். அதே நிமிஷத்தில் அடைபட்டிருந்த காட்டு ஸ்திரீயும் காணப்பட்டாள். உடனே முகுந்தன், "இனிப்பேச சாவகாசமில்லை; காரியத்தைப் பார்ப்போம்" என்று சொல்லி மறைத்து வைத்திருந்த நான்கு அரம்பங்களையெடுத்து ஸ்திரீயின் கையிலொன்றையும் ஆண்கைதிகையிலொன்றையும் கோபாலன் கையிலொன்றையும் கொடுத்து தானுமொன்றைக கையிலேந்தி எல்லாரையும் கம்பிகளை யறுக்கச் சொன்னான். உடனே மும்முரமாய் வேலை நடந்தது. கம்பிகள் வெகு காலமாய் துருப்பிடித்திருந்ததால் ஒரு கம்பியை யறுத்து ஒடித்தெருவது கடினமாயில்லை. ஒரு பத்து நிமிஷங்களுக்குள்ளாக இருவரும் விடுவிக்கப்பட்டார்கள். அவர்கள் இப்பொழுது விலங்கிடப்படவில்லை; ஆகையால் கால்கைகளை காலதாமதமின்றி பிரயோகிக்க ஆவலாயிருந்தார்கள். அந்த ஆவலைத் தடுப்பதற்கு அங்குள்ள எவருக்கும் விருப்பமில்லாததால், அப்படியே எல்லோரும எந்தப் பாதை வழியாக முகுந்தனும் கோபாலனும் சாயந்தரம் இறங்குவதாகத் தீர்மானித்துக்கொண்டார்களோ அதுவழியாகவே பத்திரமாய்க் கீழே இறங்கினார்கள். இறங்கினவுடன் மலைக்கோட்டையிலிருந்து தூக்கு பரம் வழியாக ஒவ்வொருவரும் தங்கள் சக்திக்கு இயன்றளவு ஓட்டம் பிடித்தார்கள்.

இது இப்படியிருக்க, குண்டகீலனும் கார்த்தவீரனும் ஒரு மணிநேரம் தூங்கி யிருக்கலாம்; சுமார் பத்துமணிக்கு இரத்தினமும், வீரனும் தங்கள் எஜமானர்கள் அந்நேரத்தில் அவர்களைப் பார்க்கும்படி சொல்லியிருந்ததால்

அறையிற் பிரவேசித்தார்கள் அச்சமயத்தில் காடா நித்திரையிலிருந்த தங்கள் பிரபுக்களைப் பார்த்தார்கள். சாதாரண சமயங்களில் எஜமானர்களை எழுப்பி யிருக்கமாட்டார்கள்.

ஆனால் இந்நேரத்தில் தங்களைக் காணவேண்டுமென்ற உத்திரவு கண்டிப்பாய் இருந்ததால், செய்யவேண்டிய அலுவல்கள் மகாமுக்கியமா யிருக்க வேண்டுமெனக் கருதி, உடனே தூங்கினவர்களை எழுப்பினார்கள். உடனே சகோதரர்கள் தேகங்களை யசைத்தார்கள்; கண்களைத்திறந்தார்கள்; நீண்ட கொட்டாவியாய் விட்டார்கள்; சோம்பல் முறித்தார்கள்; பிறகு ஒருவரை யொருவர் பார்த்துக்கொண்டு சிரித்தார்கள். ஒருமணி நேரத்திற்குமுன் நடந்ததெல்லாம் ஞாபகம்வரவே, முருகனை ஒரு ஐந்து நிமிஷகாலம் ஸ்தோத்திரஞ் செய்தார்கள்.

"பிரபுக்களே" என்று வீரன் சொல்லுகிறான், "தங்களது தாக்கீதுப்படி நானும் இரத்தினமும் வந்திருக்கிறோம்."

"ஆ, இன்று இராத்திரி முக்கியமாய்ச் செய்யவேண்டியது ஒன்று இருக்கிறது" என்று சிரித்திருந்த முகத்தை குண்டகீலன் கம்பீரமாய் வைத்துக்கொண்டான்.

"சித்தப்படி நடக்க ஆயத்தமாயிருக்கிறேன" என்றான் வீரன்.

"இன்று இரவு உனது ஆண்கைதி சாகவேண்டும்" என்றான் குண்டகீலன்.

"பிரபுவே, அந்தஸ்திரீயைக் கொல்லுவதற்கும் உத்திரவளிக்கவேண்டும். அவள் பெரும் மோசக்காரி."

"சரி, அப்படியேசெய். இருவர்களையும் ஒரே குழியிற் புதைத்துவிடு."

உடனே ஊழியர்கள் போய்விட்டார்களா. அப்போது தான் இருவர்களும் பத்திரம் மேஜையிலில்லாததைக் கண்டார்கள்.

"ஆ, அந்தப்பத்திரமெங்கே?" என்றான் குண்டகீலன்.

"மேஜையிற்றானே இருந்தது; ஒருக்கால் நீங்கள் சட்டைப்பையில் வைத்திருக்கிறீர்களோ?" என்று தம்பிகேட்கவே, தமையன் "இல்லையே நீ எடுத்து வைக்கவில்லையோ?" "நானா? நானதைத் தொடவேயில்லையே" என்றான் கார்த்தவீரன்.

"அப்படியானால் வந்துவிட்டது, மோசம்" என்று இடி முழக்கஞ் செய்தான் குண்டகீலன். முகம் கோரங்கொண்டது.

"ஐயோ, அந்தப் பாதகர்கள்! என்றான் தம்பி. இதற்கு மேல் ஒரு வார்த்தை கூடப்பேசவில்லை. அவ்வறையிலிருந்து இருவரும் புலிகள்போல் வெளியே பாய்ந்தார்கள். பாதகர்களது விடுதிக்கு ஒரே ஓட்டந்தான். அங்கு அவர்களைக்காணோம். உடனே ஆ! என்று சப்தம் செய்துகொண்டு, போஜன மண்டபத்தை யடைந்தார்கள், அங்கேயும் காணோம். அங்கிருந்த ஏவலாட்களிட மிருந்தும் ஒன்றும் அறியக்கூடவில்லை.

☞ ஈ. கே. சிவசுப்பிரமணிய ஐயர், பி-ஏ.

சிறுவர்களுக்கான பக்கம்.

நீதிவழுவாமை.

மறுநாள் போலீஸ் சேவகர்கள் வந்து ஸாபினஸை சிறைச்சாலைக்கு அழைத்துச் சென்றார்கள். இக்கொடும் துன்பகாலத்திலும் அவனுக்கு சுகமென்பதென்ன வென்றால், அவனுடைய பிரிய பத்தினியாகிய ஒலிந்தாவையும் அவனுடன் சிறைச்சாலையிலிருக்கும்படி அநுமதி கிடைத்தது தான். ஒலிந்தா தமது கணவருக்குப் பணிவிடைகள் செய்து வருவாள். அவளுக்கு அவன் பற்பல ரமணீயமான விஷயங்களைப்படித்து சொல்லுவான். அதனால் அவளுக்கு, வேலை செய்வதிலும் சிறைச்சாலையில் வசிப்பதிலும், அலுப்பு வெறுப்பு முதலியவை யுண்டாகாமலிருந்தது. இவ்விருவருடைய பரஸ்பர பிரீதியையும், தைவத்தினாலுண்டான நிலைமையிலும் அவர் திருப்தியுடனிருப்பதைக்கண்டு, அவ்விடத்திலிருக்கப்பட்ட மற்ற கைதி மார்களுக்கு மெத்த ஆச்சரியமும் ஸந்தோஷமு முண்டாயிற்று. அச்சிறைசாலையில்இருக்கப்பட்டவர்களில், ஏதாவது விஷயங்களில் கொஞ்சம் மனஸ்தாபம் வந்தால் அவர்கள் முதலில் ஸாபினஸையும், ஒலிந்தாவையும் கூப்பிடுவார்கள்.

இவ்வளவு தரித்திரமிருந்தும் அவர்கள் ஒருவருக்கொருவர் ஒருநாளும் கோபித்துக்கொள்வதுகிடையாது. என்னால் உனக்கு சிறைச்சாலையில் வசிக்க வேண்டி நேரிட்டதென்று சில சமயங்களில் ஸாபினஸ்சொல்லிவருந்துவான்.

அப்பொழுது ஒலிந்தா பிராணநாதா! நானென்னசொல்லட்டும்? எனக்கு இந்த சிறைச்சாலையில் வசிக்கிற துக்கத்தைவிட தாங்கள் பேசுகிற வார்த்தைகள்தான் அதிக துக்கத்தை விளைவிக்கின்றது. தாங்கள் ஒருபொழுதும் இத்தகைய எண்ணங்களுக்கு, மனதில் இடம் கொடுக்கலாகாது. தங்களால் எனக்கிந்த சிறைச்சாலை வாஸம் அநுபவிக்கவேண்டி நேரிடவில்லை. என்னால் தான் தங்களுக்கிந்த துன்பங்களை அநுபவிக்கவேண்டி நேரிட்டிருக்கின்றது. நான் சொல்லுவது மெய்யோ, பொய்யோ என்பதைப்பற்றி தாங்களே யோசியுங்கள். ஆறியானுவின் சொற்படி என்னை விலக்கியிருந்தால் அவளுடைய சொத்தெல்லாம் தங்களுக்குக் கிடைத்திருக்கு மல்லவா? பிராணநாதா! கடவுள் நம்மை எந்த நிலைமையில் வைப்பாரோ அந்நிலைமையிலிருப்பது தான் மிகவும் நலம். மேலும் அதுதான் நமது முக்கியமான கடமை. இதை இகழுவது கடவுளை இகழ்வதற் கொப்பாகும். சிறைச்சாலை வாஸத்தினால் தங்களுக்குத் துன்பமுண்டாகக் காரணமே யில்லையே. தாங்கள் கொலை களவு முதலிய இழிவான செயல்களொன்றையும் மனமாற செய்திர்களன்று.

மேலும் சிறைச்சாலையில் கொண்டுவந்து வைக்கப்பட்டவனுடைய சொத்தையொன்றும் மூழ்கச் செய்யவேண்டுமென்பதும் தங்களுடைய எண்ணமல்லவே; ஆனால் பொருள் தங்கள் கையிருப்பிலில்லை; அதற்கு தாங்கள் என்ன செய்கிறது? பிறருக்கு தீமை விளைவிக்கவேண்டுமென்கிற கருத்துடன் எச்செயலை ஒரு மனிதன் செய்கிறானோ, அச்செயல்தான் குற்றமாக ஏற்படும் என்று நீதிசாஸ்திரத்தில் சொல்லியிருப்பது மெய்யாயிருக்கும் பக்ஷத்தில் தாங்கள் குற்றவாளியல்ல. தாங்கள் எவ்வளவும் வருத்தப்படலாகாது. நான் தங்களுடைய சேவைசெய்யவேண்டும். தாங்கள் என்பேரில்

அன்பு பாராட்டவேண்டும். இவ்வாறாக நாம் நீதிவழுவாமல் ஈசுவரபஜனம் செய்துகொண்டு காலத்தை இனிதாகக் கழிக்கவேண்டுமென்பதுதான் என் கோரிக்கை. தாங்கள் சிரித்தமுகமா யிருப்பதுதான் எனக்கு சுகம். தாங்கள் உதாசீனமாயிருப்பது தான் எனக்கு துக்கம்.

ஸாபினஸ் தனது மனையாள் பேசியதைக் கேட்டு சந்தோஷமடைந்து, தனக்கு இவ்வளவு ரூபவதியாயும், புத்திசாலியுமான மனையாள் கிடைத்ததற்காக கடவுளுக்கு மிகவும் ஸ்துதி செலுத்தலானான். இவ்வாறாக நாட்கள் போகப்போக, அவர்கள் நிர்வாகத்தின் பொருட்டு வீட்டிலிருந்து கொண்டு வந்த ஆகாரவஸ்துக்களெல்லாம் தீர்ந்துபோய்விட்டது. பசியினால் பரிதபிக்கலானார்கள். இவ்வாறிருக்க ஒருநாள் என்ன நடந்ததென்றால், அவ்விருவரும் பட்டினி யிருக்கவேண்டியிருந்தது. அவர்களுடைய குழந்தையொன்றிருந்தது. அது ஆகார மொன்றுமில்லாததனால் பசிபசியென்று துடிப்பதைப் பேசாமல் பார்த்துக்கொண் டிருக்கவேண்டியதாயிற்று. அவர்களுக்கு துக்கம் மேலிடுகிறது. அவர்கள் என்ன செய்வார்கள்? இப்படியிருக்க, ஆரோ ஒரு மனிதன் அவர்களிருக்கப்பட்ட அறையில் வந்து, தங்களுடைய ஆரியனா, மரணமடைந்தாள். அவள் தன் சொத்தை எல்லாம் வேறொருவன் பெயருக்கு எழுதிவைத்திருக்கிறாள். அம்மனிதன் வெகு தூரதேசத்தி லிருக்கிறபடியால் சாகும்காலத்தில் எழுதிவைக்கும் உயில் தங்களுக்குக் கிடைக்கும் போலிருக்கின்றது. அதை நீங்கள் வாங்கி, தீ கொளுத்தி பொசுக்கி விடுவீர்களானால் எல்லா சொத்தும் உங்களுக்குக் கிடைத்துவிடும். ஏனென்றால், உங்களைவிட கிட்டின உறவினர் ஆரியானாவுக்கு ஒருவருமிலர் என்று ஸாபினஸ் இடம் சொன்னான். இச்சங்கதியைக் கேட்டதும் அவ்விருவரும் நடுங்கலானார்கள்.

ஸாபினஸ் அம்மனிதனைக் கோபத்துடன் பார்த்து, போ, போ, போ, இவ்விடத்திலிருந்து சீக்கிரம் போ, என்றான். இதைக்கேட்டு அம்மனிதன் போய்விட்டான். பிறகு அந்த புருஷன் பெண்ஜாதி யிருவரும் ஒருவருக்கொருவர் கட்டிக்கொண்டு, இனி நமக்கு உதவி புரிகிறவர்கள் ஒருவருமிலர் என்று சொல்லி துக்கிக்கலானார்கள்.

இச்செய்கைகளையெல்லாம் அடுத்த அறையிலிருந்து பார்த்துக்கொண்டிருந்த ஆரியானா ஸாபினஸ்னுடைய நீதிவழுவாமையைக் கண்டு திகைக்கலானாள். அவனைப் பரிசோதிக்கும் பொருட்டுதான் இவ்வளவு முயற்சி எடுத்துக் கொண்டிருந்தாள். கடைசியாய் யானை ஊசியின் நுனியி லிருக்கப்பட்ட துவாரத்தில் நுழைந்தாலும் நுழையுமேயன்றி ஸாபினஸ்நீதியைக் கைவிடமாட்டான் என்று அவளுக்குப் புலப்பட்டது. அவனுடைய நீதிவழுவாமையைக் கண்டு வியப்புற்று, இவ்வளவு பெரிய புண்ணியசீலனை தான் அந்நியாயமாய் கஷ்டப்படுத்தினதற்காக பச்சாத்தாபப்பட்டு, இனிமேல் ஸாபினஸ் பேரில் தயவுடனிருப்பதுதான் தனது முக்கியமான கடமையென்று எண்ணி, கண்ணுங் கண்ணீருமாக ஸாபினஸ் இருக்கப்பட்ட அறையில் வந்து அவனை அன்புடன் ஆதரித்து சிறைச்சாலையினின்றும் விடுவித்து, தன்னுடைய சகல சொத்தையும் அவனுக்களித்தாள்; பிறகு ஸாபி

னஸ்ஸூம் ஒலிந்தாவும் தம் ஆயுள் முழுவதும் காலத்தைச் சுகமாய் கழித்து வந்தார்கள்.

நண்பர்களே! எத்தகைய துன்பம் வரினும் நல்லோர்கள் நீதிவிட் டகலார்கள் என்பது மேற்கூறிய கதையினுல்சித்தமாகின்றதல்லவா? ஒவ்வொருவரும் நீதியென்னும் அரியவஸ்துவை கையாளுவார்களாகில் இம்மையிலும் மறுமையிலும் சாசுவதமான சுகத்தை அடைவார் களென்பதற்குச் சந்தேகமென்ன?

[மது மக்ஷிகை என்னும் மராட்டிபுஸ்தகத்திலிருந்து மொழிபெயர்க்கப் பட்டது.]

☞ மங்களாபாய்.

பிறந்தநாள் பரிசு.

கங்கை நதிக்கரையில் வடபுறத்துள்ள ஆவா என்ற ராஜதானியில் ஒருக்கால் மிகவுஞ் செல்வத்தோடு வளர்ந்த ஓர் இளவரசுக்குப் பட்டங்கட்டப்பட்டிருந்தது. இவருக்கு முடிசூட்டும் வயது பதினேழு ஆனவுடன், அந்த ராஜியத்திலுள்ள பெரியோர்களும், சிறியோர்களும் வழக்கப்படி தங்களாலியன்ற மட்டும்விலையுயர்ந்தவெகுமதிகளைப்பலஇடங்களிலிருந்தும்சேகரித்துராஜனுக்குப் பிறந்தநாள் பரிசாகக்கொண்டுவந்தார்கள். வயிரங்களிழைத்தப் பணிச்செப்புகள்,நூதனமான ஐரோப்பியக் கடியாரங்கள்,சகல வியாதிகளையும், விஷங்களையுந் தீர்க்கவல்ல மந்திர மூலிகைகள் சற்றுங் கலப்பில்லாத வாசனை பொருந்திய மக்காத்தைலங்கள், மிகவும் விலையுள்ள அராபிக்குதிரைகள், அழகு வாய்ந்த அடிமைப்பெண்கள், முதலிய பலவேறு இனங்களை கொடுத்தார்கள். அரமனை முழுவதும் அபூர்வ சாமான்கள் வைக்கப்பட்டிருந்தன.

வேலையாட்கள் இவைகளை எடுத்து ஒதுக்கிய வண்ணமாய் இருந்தார்கள். கடைசியாக, வயோதிகனொருவன் வெகு தூரத்திலிருந்து பிரயாணப்பட்டு ராஜன் முன்னிலையில் வந்து அடிபணிந்து கையில் ஓர் சிறுபையை ஏந்தி பின் வருமாறு சொன்னான்:—

"ஓ! ராஜசிரேஷ்டனே! நான் தங்களுக்கு வணக்கத்தோடு தருவதாகிய இச்சிறுவெகுமதியைப்பெற்றுக்கொள்ளவேண்டும். இது பார்வைக்குச் சிறியதாயினும் விலையில் பெரியது. ஏனையோர்கள் தங்களுடைய சரீரத்தை அலங்கரிக்கத் தகுந்த பரிசுகளைத் தந்தனர்; இதோ நான் தருவது தங்களுடைய முகத்திற்கு இன்றியமையாததாகிய அருளைக்கொடுக்க வல்லது. மற்றவர்கள் தங்களுடைய நாவிற்கு ருசியைத் தரக்கூடிய பழங்களைத் தந்தனர்; இதோ நான் தருவது தங்களுடைய நாமத்தை உச்சரிக்கும் நாவிற்கு என்னாளும் ருசியைக் கொடுக்கக்கூடியது. அன்னியர்கள் தங்களுடைய கண்களுக்கு இனிமை தரத்தகுந்த வஸ்துக்களைத் தந்தனர். இதோ நான் தருவது தங்களுடைய மனதிற்கு என்றும் சலிக்காத ஆனந்தத்தைத் தரத்தக்கது. சிலர் தேகத்தைப் பூரிக்க வல்ல மருந்துகளைத் தந்தனர்; இதோ நான் தரு

வது, தங்களுடைய நல்லறிவை, நோயுறச்செய்யாமல் பாதுகாக்க வல்லது· எல்லோரும் இம்மைக்குரிய சம்பத்துக்களைத் தந்தனர்; இதோ நான் தருவதோ, என்றும்அழிவில்லாத மறுமைக்குரியச் செல்வத்தைத் தரத்தகுந்தது" என்று தன் கையிலிருந்த பையைத்திறந்து, சற்குணமும் முதிர்ந்த ஞானமும் பொருந்திய சென்றூர் என்னும் பெரியோரால் எழுதப்பட்ட சன்மார்க்கபோதனை என்ற புஸ்தகத்தை எடுத்து, மகாராஜனே! இதை தாங்கள், தங்களுடைய நெருங்கிய மித்திரனுகப்பாவித்து வந்தால், எப்பொழுதும அதினின்று சுகமும், சந்தோஷமும் சித்திக்கும். கடினமான ராஜ்ஜிய விஷயங்களில் இது தங்களுக்குப் பழுதில்லாத மந்திரியாய் உதவும். அறிவைக்கெடுக்க வல்ல காமம், சினம் முதலிய கொடிய நோய்கள் தங்களைச் சுற்றிக்கொள்ளுங்கால், அவற்றிற் கிடங்கொடாதபடி எச்சரிக்கைத் தரத்தகுந்த போதகராகும், என்று புஸ்தகத்தைப் பையினுள் திரும்ப அடைத்து வணக்கத்துடன் ராஜன் கையிற் கொடுத்தான்.

இதை அவ்வாலிப சக்கரவர்த்தி உபசாரத்தோடும், அனுக்கிரகத்தோடும், பெற்றுக்கொண்டதுமில்லாமல், கொடையாளியின் விருப்பத்திற் கிணங்க செங்கோல் செலுத்தி வந்ததாகச் சரித்திரம் கூறுகிறது.

☞ ஓர் மாது.

யானையைப்பற்றி நாம் இத்தடவை இரண்டு கதைகளை எழுதுகிறோம்.

யானையின் புத்திகூர்மை.

சிலோனில் சர்வில்லிய் க்ரிகாரி என்பவர் கவர்னராயிருந்த காலத்தில் கேபர்க் அரசகுமாரி இத்தீவைப் பார்க்க வந்திருந்தார்கள். அப்பொழுது க்ரிகாரி அவர்கள் அரசகுமாரத்திக்கு அத்தீவிலுள்ள பற்பல விசேஷ ஸ்தலங்களைக் காட்டினூராம். யானைகள்வேலை செய்வதைப் பார்க்க விரும்பி அவரைக் கேட்கவே, அவரும் அவ்விதமே யானைகள் வேலை செய்வதைக் காண்பிப்பதாகச் சொல்லி கண்டியில் ஒரு கோயிலிலிருந்து இரண்டு யானைகளை வரவழைத்தார். அவைகளை எந்த வேலை செய்யச் சொன்னபோதிலும் சுலபமாகச் செய்தனவாம். பெரிய கற்களை வெகு எளிதில் சங்கலி கட்டி எடுத்துக் கொண்டுபோய் மற்றொருவிடத்தில் வைத்து அச் சங்கலியை அவிழ்த்துக் கொண்டுவந்ததாம். பின்பு மற்றொன்று செய்ததானது எங்களுக்கு மிகுந்த ஆச்சரியத்தை உண்டாக்கியது என்று சொல்லுகிறூர்கள். அதாவது அது பெரியதும், நீண்டதும், பளுவுள்ளதுமான ஒரு கல்லுக்கு சங்கலியைக்கட்டி தானே செங்குத்தான பாறையிலிருந்து இறங்கிவரும்பொழுது அக்கல் அதன் முழங்காலில் பட்டுக்கொண்டேவந்ததாம். அப் பெரிய கல் இவ்விதம் பட்டுக்கொண்டேவந்தால் அதற்கு நோவுண்டாகுமல்லவா? அது நின்று, அச்சங்கலியை எடுத்து தன் தந்தத்தில் சுத்திக்கொண்டதாம். இப்படிச் செய்தவுடன் கல் தன் முழங்காலில் முன்போல் படுகிறதாவென்று பார்த்ததாம். அச்சங்கலி நீண்டிருந்தமையால் அக்கல் அதன் முழங்காலில் பட்டுக்கொண்டிருந்தது. இப்பொழுது எப்படிபடும்? படாததைக்

கண்டு யாதொரு அசௌக்கியமின்றி கொண்டுபோகவேண்டிய யிடத்திற்குக் கொண்டுபோய்ச் சேர்த்ததாம்.

ஒருதினம் யானைப்பாகன் யானையை ஒருமரத்தில் கட்டிவிட்டு அதற்குச் சற்று தூரத்தில் அடுப்புவைத்து சமையல்செய்து அதைக் கற்களாலும் புல்லாலும் பத்திரமாய் மூடிவிட்டு வெளியிற்போனானும்.

யானையின் தந்திரம். அவன் போனவுடன் இந்த யானை மெதுவாகத் தன் காலைச் சுற்றியுள்ள சங்கலியை மெதுவாக அவிழ்த்து, அடுப்புள்ள விடத்திற்குச் சென்று, கல்லையும் புல்லையும் அப்புறப்படுத்திவிட்டு, அதிலுள்ள ஆகாரத்தை எடுத்துப் புசித்தபின், அது முதலிலிருந்தமாதிரி நன்றாக மூடி தன்னிருப்பிடத்திற்கு வந்துவிட்டதாம். அது தன் காலில் சங்கலியை முன்போல சுத்தமுடியவில்லையாம். ஆயினும், முன் சுற்றியிருந்தாற்போல் தோன்றும்படியாக அதை எடுத்து சுத்திக்கொண்டு அடுப்பைநோக்கி நில்லாமல் அதற்குப் பின்னால் நின்றுகொண்டிருந்ததாம். யானைப்பாகன் வந்து புசிக்கப் பானையைப் பார்த்தவுடன் அதில் ஒன்று மில்லாததைக் கண்டு ஆச்சரியமுற்று இங்குமங்கும் பார்த்து ஒன்றும் புலப்படாமல் ஏதோ சந்தேகத்தால் யானையினிடத்திற்குச் சென்று அதன் சங்கலி கழன்றிருப்பதைக்கண்டு அதுதான் இப்படி செய்திருக்க வேண்டுமென்று தெரிந்து கொண்டானும்.

☞ தாதா.

*வசனராமாயணம்.

(1) மகா பல பராக்ரவந்தரான அனுமார் ராக்ஷசஹிகள் நித்திரையிலிருந்த சமயம் பார்த்து சீதை அருகில் சென்று அந்த ஜானகிக்கு வந்தனம் செய்து சீதையுடன் வெகு வினயமாய் பேசத்தொடங்கினர்: 'ராக்ஷச ஸ்திரீகளிருக்கையில் உத்ஸாகித்து சீதையுடன் அனுமார் சம்பாஷிக்கிறதற்கு எப்படி நேர்ந்ததென்றால் திரிஜடை தன் சொப்பன விரித்தாந்தத்தை உரைக்கையில் ராக்ஷச ஸ்திரீகளெல்லாரும் கேட்டு பயப்பட்டு சீதை நமக்கு சரணகதி என்று நினைத்ததால் அனுமார் நிர்ப்பயமாய் பேச ஆரம்பித்தாரென்று தெரியவருகிறது.

(2) ஓ ஜானகி! நீ யார்! வஸ்திரம் தரித்துக்கொண்டு இந்த செடிகளைப் பிடித்துக்கொண்டிருக்கிறாய்; பத்மரேகைபோல் நேர்த்தியுடைய கண்களிலிருந்து ஆனந்த பாஷ்பங்கள் பொழிவதினால் என்ன நினைத்துக்கொண்டு புலம்புகிறாய்? பத்மரேகையிலிருந்து தாரை தாரையாய் ஜலம் வந்ததுபோல உன் கண்ணிலிருந்து ஜலம் வருகின்றது. அதை உரையுமென்று அனுமார் சீதையைக் கேட்டார்.

* ஒரு தெலுங்கு மாது தமிழ்ப்பாஷையைக் கற்றுக்கொண்டு இவ்விஷயத்தை எழுதியனுப்பியிருக்கிறார்கள். மாதர்கள் விடாமுயற்சியுடனிருந்தால் கல்வி பயிலலாமல்லவா? [ப.ர்.]

(3) ஓ அன்னையே! உன்னைப் பார்த்தால் மானிடரூபம் தரித்திருக்கின்றாயேயொழிய மனுஷியல்ல; தேவாசுர, நாக, கந்தர்வ, ரக்ஷோ, யக்ஷ, கின்னர, ஜாதிகளில் நீ ஒருவளாக யிருக்கலாம். மானிட ஜாதியல்ல, அப்படி உன் ரூபலாவண்ணியாதி குணங்களால் தோன்றுகின்றது; எதார்த்தத்தை உரையுமென்று சீதையை அனுமார் கேட்டார்.

(4) ஏ மாதா! ஏகாதசருத்தர்கள், சப்தருதுக்கள், அஷ்டவசுக்கள் இவர்களில் ஒருவளாகயிருக்கலாம். சாக்ஷாத் பரதேவதை இதற்குச் சந்தேகமில்லை என்று எனக்கு தோன்றுகின்றதென்று அனுமார் சீதையைப் பார்த்துச் சொன்னார்.

(5) ஓ ஜானகீ! எக்காரணத்தினாலேயோ சந்திரனைப் பிரிந்து அஸ்வன்னியாதி நக்ஷத்திரங்களில் சர்வோத்தவமான சகல குணங்களோடு ப்ரசித்தி அடைந்து சுவர்க்கத்திலிருந்துவந்த ரோஹிணீ தேவியோ? ஓ கல்யாணி! நீ யார்? ஓ சுந்தரீநேத்ரீ! நீ யார்? உரையுமென்று அனுமார் சீதையைக் கேட்டார்.

(6) ஓ அன்னையே! நீ சாக்ஷாத் வசிஷ்டர் மனைவியாகிய அருந்ததியாயிருக்கலாம்; ஆனால் எதனாலேயோ கோபித்து அஞ்ஞானத்தினாலேயோ அம்மஹாத்மாவின்மேல் கோபித்துக்கொண்டு சுவர்க்கத்திலிருந்து பூலோகத்தில் மானிடரூபமெடுத்து வந்திருக்கிறாய்; இதற்குச் சந்தேகமில்லை. இது சத்தியமா அசத்தியமா என்று அனுமார் சீதையைக் கேட்டார்.

(7) ஓ ஜானகீ! புதல்வன், தகப்பனார், சகோதரன், எஜமானன் இவர்களில் யாராவது மரணமடைந்தாரா? அவரைக்குறித்து நீவிசனப்படுகிறாயா? உரையுமென்று அனுமார் சீதையைக் கேட்டார்.

(8) ஓ தாயே! முதல் தேவவர்ஸஸ்யைப் பிடித்து தேவதாஜி என்று நினைத்தால் தேவதாஜிகளுக்கு ரோதனை நிஸ்வாசம் பூமியைத்தொட, ராஜ இலக்ஷணங்களில்லை, உன்னிடம் இந்த லக்ஷணங்களிருக்கையில் நீ தேவதாஜி போல் என்மனதில் படுகின்றது தோன்றவில்லை என்று அனுமார் உரைத்தார்.

(9) ஓ ஜானகீ! ஜெகந்நாத ஸ்தலங்களில் உத்தம ஸ்திரீ லக்ஷணங்களைப் பாதங்கள் கரங்கள் முதலான அவயவங்களில் சாமுத்ரிக சாஸ்திரத்தில் யுரைத்த லக்ஷணங்கள் உனக்கு உண்டாகுமென்று நீ சக்ரவர்த்தியுடைய பாரியாள், ராஜபுத்ரி, நீ சாமான்னியஸ்திரீயல்லவென்று எனக்குத்தோன்றுகின்றதென்று அனுமார் சீதையைக்கேட்டார்.

(10) ஓ ஜானகீ! உன்னை ராவணன் ஜனன ஸ்தானத்திலிருந்து பலாத்காரமாக எடுத்துக்கொண்டு வந்தது உண்மைதான். அதினால் நீ சீதைதான். ஆனாலும் என் சந்தேகந்தீரும்படி உண்மையுரையுமென்று அனுமார் சீதையைக் கேட்டார்.

(11) ஓ தாயே! உன்னுடைய தசை மிகவும் ஈனமாயிருந்தும் மானிடர்களுக்கு இல்லாத ரூபா ரேகா விலாசங்கள் தபோவந்தர்களுடைய வேஷமும் உன்னிடமிருக்கின்றது. ஆகையால் நீ ராமருடைய பட்ட மகிஷிபோல் காணுகின்றாய் இது உண்மையென்று நம்புகிறேன்.

(12) அந்த சீதாதேவி அனுமாருரைத்த ராம சங்கீர்த்தனைகள் பூர்வகமாக உரைத்த வசனங்களைக் கேட்டு மிகச் சந்தோஷித்தவளாய் செடி மறைவிலிருந்த அனுமாருடன் மறுபடி ஒருவசன முரைத்தாள்.

(13) ஓ வானரோத்தமா! என்னுடைய எதார்த்தமான விருத்தாந்தங்களைச் சொல்லுகிறேன் கேளும். பூமண்டல ராஜாக்களில் மிகுந்த உத்தமரான நல்ல சுபாவமுடைய தஸரத சக்ரவர்த்தியினுடைய மருமகள். அவர் சத்துருக்களை வெல்லப்பட்டவர். அவர் ஜீவித்திருக்கும் பக்ஷத்தில் ராவணனால் எனக்கிப்படிப்பட்ட துயரமிருக்காதல்லவா? பிறகு மஹானுபாவரான ஜனக சக்ரவர்த்தியுடைய புதல்வியான சீதை என் நாமதேயம், ஸ்ரீராமச்சந்திரருக்கு மனைவி என்றுரைத்தாள்.

(14) ஓ வானரோத்தமரே! பிறகு நான் அயோத்தியாப் பட்டணத்தில் ஸ்ரீராமச்சந்திரருடன்கூட சகல சந்தனுதிபோக மெதேச்சமாக பன்னிரண்டு வருஷம் வரைக்கும் நான் அனுபவித்து பிறகு பதின்மூன்றும் வருஷத்தில் தஸரதன் மந்திரி புரோகிதர்களோடு ஆலோசித்து சேஷ்ட புத்திரரான ஸ்ரீராமச்சந்திரருக்கு பட்டாபிஷேகம் செய்ய நிச்சயித்து அதற்குத் தகுந்த சாமக்கிரியை சேகரிக்க அதற்குள் தசரதர் இரண்டாம் மனைவியான கைகேயி என்பவள் ராமருக்கு பட்டாபிஷேகம் செய்தால் நான் நித்திரை ஆகாரம் வர்ச்சிக்கிறேன். இதுவே எனக்குமிருத்யுவென்றும் முன்புசம்பாசுரனுடைய யுத்தம் செய்தபோது எனக்கு நீங்கள் கொடுத்த இரண்டு வரங்களை வீண் செய்யக்கூடாதென்று எண்ணினேனாகில் ராமர் பட்டணம்விட்டு தண்டகாரண்ணியம் போகவேண்டும், இதுமுதல்வரமென்றும் பர்த்தாவுடன் யுரைத்து நிர்ப்பந்தம் செய்தாள். பிறகு அந்த கடூரநிஷ்டவாக்கியத்தை அவர் கேட்டு சத்தியம் தவறாதவராகையால் முன்பு தான்கொடுத்த இரண்டு வரங்களை நினைத்துக்கொண்டு திடுக்கென்று மூர்ச்சையடைந்தார்.

(15) தஸரதன் மூர்ச்சை தெளிந்திருந்து சுபாவமாக சத்திய தர்மார்த்தனாகையால் அய்யோ! இந்த கைகேயி அத்தியந்த பிரிய புத்திரனான ராமருக்கு த்ரோகம் செய்கிறாளென்று துக்கித்துக்கொண்டு இதுவரையில் மனதில் ராமருக்கு கொடுத்த ராஜ்ஜியத்தை பரதனுக்கு கொடுக்க ஸ்ரீ ராமரை வரவழைத்தார்.

☞ ஓர் மாது.

சொஸ்தமாக்குவதைவிட வியாதியைத் தடுப்பது நலம்.

நல்ல தேகக்கட்டுள்ள ஒருமனிதன் பிளேக், அம்மை, காலரா, நுரையீரல் முதலிய வியாதிகளுக்குப் பயப்படவேண்டியதில்லை. வியாதி எப்பொழும் பலஹீனமுள்ளவர்களைப் பீடிக்கிறது. அவ்விதமுள்ளவர்களுடைய தளர்ந்த நரம்புகள் அதைத்தாங்குவது கஷ்டம்

SCOTT'S Emulsion

ஸ்காட்ஸ் எமல்ஷன் வியாதியைத்தடுத்து சரீரத்தில் தளர்ந்தநரம்புகளைப் பலமுள்ளவைகளாகவும், சதைகளைப்புஷ்டியுள்ளவைகளாகவும் செய்து வியாதி கிட்ட அண்டாமல் உனக்குச் சக்தியைக் கொடுக்கிறது.

மருந்து உட்கொண்ட பின் இதன் அனுபவம் தெரியும்,

கையினால் தொடப்படாமலே செய்யப்படுகிறது,

எல்லா ஔஷத சாலையிலும் விலைக்கு பெற்றுக்கொள்ளாம்
ஸ்காட் அண்டு பௌன் கம்பெனி லிமிடெட்.

தயார் செய்கிற ரசாயன கர்த்லண்டன் இங்கிலாது,

POPULAR LECTURES FOR TEACHERS EMPLOYED IN ELEMENTARY SCHOOLS.

ELEMENTARY SCIENCE.

PHYSICS (2.)

ஜலமும் ஆகாயமும்.

A. ஜலத்தின்குணங்கள்:-(1) ஜலத்தைச் சுருக்கமுடியாமை (incompressibility). ஜலம் நிரம்பிய ஒரு குழாயில் ஓர் இடத்தில் அழுத்த, மற்ற பாகங்களிலும் இச்சக்தி பலித்தல். இச்சக்தி சதுர அளவுக்குத் தக்கபடி பரிமாணமுடையதாதல். பஞ்சு மூட்டையை அழுத்திக்கட்டும் யந்திரம் (Bramah press). மூட்டைகளைத் தூக்கும் நீர்சக்தியந்திரம்(Hydraulic cranes).

(2). ஜலத்தின் பாரம்:—ஜலம்வைத்த பாத்திரங்களின் பக்கங்களையும் அடித்தட்டையும் ஜலம் அழுத்துதல் (pressure). அழுத்தும் சக்தி ஆழத்திற்குத் தக்கபடி மாறுதல். ஏரிக்கரைகள், அணைக்கட்டுகள்: இவற்றின் உருவம்.

(3)ஜலத்தில் வஸ்துக்களின் எடை குறைவாக காணப்படுதல் (buoyancy)—ஜலத்தின் மிதக்கும் சக்தி வஸ்துவின் பரிமாணத்தை பொருத்தது. ஆர்க்கிமிடீஸின் பொதுவிதி. தராதர எடை எண்கள் (specific gravity) இவற்றை உபயோகிக்கும் விதம். மிதத்தல்; மிதப்பதன் பொதுவிதிகள். படகுகளில் குறிப்பிடும் ஜல மட்டக்கோடுகள், அவற்றில் ஏற்றும் பாரத்தின் எல்லைகள், அவற்றின் உருவம். நீந்துதல், மீன் தேகத்திலுள்ள காற்றுப்பை.

(4) த்ரவங்கள் சோதிக்கும் டிக்ரிக்குழாய்கள் (hydrometers).

B. (1) ஆகாயமண்டலம், அதன் எல்லை, ஆகாயமும் (air) காற்றும் (wind.)

(2) ஆகாயம் சுருங்கும், பளுவுள்ளது. இடத்திற்குத் தக்கபடி அதன் எடை வித்தியாசப்படும்.

(3) ஆகாயத்தட்டுகள் அழுத்துதல் (pressure)— ஆகாயத்தின் அழுத்தும் சக்தி (atmospheric pressure.) வாயுமானி (barometer) வாயுமானி யந்திரத்தில் தோன்றும் வித்தியாசங்களும் அவற்றால் நாம் அறிந்து கொள்வதும்.

(4) ஆகாயத்தின் மிதக்கும் சக்தி— புகைக்கூண்டு (balloon), புகைக்கூண்டு கப்பல்கள் (dirigibles). பறக்கும் யந்திரம் (æroplanes).

C. (1) பீச்சாங்குழல் (syringe)

(2) வால்வ் என்னும் அடைப்பான்கள். பம்பு அல்லது ஜலசூத்திரம். எவ்வளவு பள்ளம் வரையில் இது ஜலத்தை இழுக்கும்?

(3) தீயவிக்கும் ஜலயந்திரம் (fire engine).

(4) காற்று உப்பி (cycle pump). வாயுவாங்கி (air pump). இவற்றின் உபயோகம்.

முக்கிய அறிவிப்பு.

நமது பத்திரிகையில் கூடிய சீக்கிரத்தில் சித்திரப்படங்களைப் பிரசுரித்துவர ஏற்பாடு செய்துவருகிறோம். இவைகளுக்கு ரூபா-100 வேண்டும். இதற்காக ம-ா-ா-ஸ்ரீ தி. அ. ராமலிங்கசெட்டியாரவர்கள் பி-ஏ. பி-எல். அன்புடன் அனுப்பிய ரூபா 10-யும் வந்தனத்துடன் பெற்றுக்கொண்டோம். இஷ்டமுள்ள கனவான்கள் தங்களா லியன்றளவு திரவிய சகாயம் செய்ய முன்வருவார்களென்று நம்புகிறோம். ப-ர்.

வியாதிநீங்காது வருந்துவோருக்கு கைகண்ட மருந்து. எளிதில் சொஸ்தப்படுத்துகிறது.

அடியிற்கண்ட சொஸ்தமாகாத வியாதிகளினால் கஷ்டப்படுகிறவர்களை உடனே சொஸ்தப்படுத்தும். அநேக பேர்பெற்ற டாக்டர்களால் இம்மருந்து பரிசோதிக்கப்பட்டு அடியில் வரும் வியாதிகளுக்கு இது நல்லமருந்தென்று நன்கு மதிக்கப்பட்டிருக்கிறது. எல்லாவிதசுரம், மலேரியா சுரம், நீண்டமண்ணீரல், பித்தாசயம், மகோதரவியாதி, பிளவை, மேகவெட்டை, கிரந்திப்புண், நீர்ரோகம், வாதம், இரத்தரோகம், முதலியவைகளை இந்த மருந்து சொஸ்தப்படுத்திவருகிறது.

Arayn Sarasaparilla.

ஆரியன்சரசபரிலா என்ற நன்னாரிவேர் சர்பத்து பலவீனர்களுக்கு பலத்தையும் புஷ்டியையும் கொடுக்கும்.

Medicateel Scentd Hair Oil.

மருந்துவகை சேர்ந்த வாசனைபொருந்திய கூந்தல் தைலம். வழுக்கைத்தலைக்கும், மயிர் வளரவும் உதவும். முகப்பருவு முதலியவைகளுக்கு வாசனையுள்ளமருந்தும் கிடைக்கும். இவைகளுக்கு சார்ஜ் நடுத்தரமானது, பொதுஜனங்கள் ஒருதடவை முயற்சி செய்யலாம், ஆர்டர் அனுப்பினால் உடனே சாக்கிரதையாக மருந்துகள் அனுப்பப்படும். இங்கிலீஷில் எழுதவேண்டும்.

Apply To:—The Manager. GANGULY FRENDS & Co.
27 1, Sham Bazaar Street, Bagh Bazaar P. O., Calcutta.

பிடித்தமில்லாதபோனால் ரூபாய் திருப்பி அனுப்பப்படும்.

எங்களுடைய பட்டில், மற்ற வியாபாரிகளைப்போல, நூலு கலப்பில்லை. 11 முழம் நீளம் 54 இஞ்சு அகலமுள்ள ஒருதான் பட்டின் விலை ரூ 8முதல் 25 வரை. பீதாம்பரச்சேலை:—16 முழம் நீளம் $2\frac{1}{2}$ அகலம் விளிம்பும் முந்தியும் ஜரிகைவேலை உடல்சாதா ரூ. 18 முதல் 30 வரை. ரவிக்கைகள்:—ஓரங்களில் ஜரிகை வேலை செய்தது. உடலில் ஜரிகைப் பூக்கள் போட்டது. எல்லா நிறத்திலும் கிடைக்கும். ரூ. 2-12-0. முதல் 5 வரை. குழந்தைகளுக்கு பீதாம்பர வேஷ்டிகள்:—4 முழம் நீளம் $1\frac{3}{4}$ முழம் அகலம் நாலுபக்கமும் ஜரிகையினால் வேலை செய்தது ரூ. 3 முதல் 5 வரை. இன்னும் அநேக விதமான பட்டுபீதாம்பரங்களுக்காக எங்களுடைய கேட்லாக் வரவழைத்துப் பார்க்கவும். எம். டி. ப்ரதர்ஸ் அன்கோ கேபாலூநாலா பனாரஸ். பட்டு பீதாம்பரம் சொந்தமாக தயார் செய்பவர்கள்.

M. D. BROTHERS & Co.,
Bolanala, Benares City,

LADIES TOILET SPECIALIST.

Chemicals to increase the growth of eyelashess—bleaching and whitening powder for the face and hands.—Hair lengthening and blackenng wash—brightening drops for eyes—Internal complexionipills. Fat reducing solution—skin tightener for loose and flabby parts—Rs. 1 each—consultation on every other matters oSlicited.

DR. PRABHAKER, Grant Road Bombay (American Graduate).

NEWS & NOTES.

சமாசாரக் குறிப்பு.

ஒருநன்கொடை:—சென்னை இராஜதானி ஸ்திரீகள் போதனாமுறை பாடசாலையில் தமிழ்ப்பண்டிதையாயுள்ள ஸ்ரீமதி வி. முத்ராமணி அம்மாள் தமது காலஞ்சென்ற குமாரத்தி சுந்தராபாய் கோவிந்தராஜுலுவின் பேரில் ஒரு வெள்ளிப்பதக்கம் இதில் தேறும் ஒரு ஸ்திரீக்கு ஒவ்வொரு வருஷமு மளிக்க தாம் எண்ணங்கொண்டிருப்பதை கவர்ன்மெண்டாருக்குத் தெரிவித்தவுடன் அவர்கள் அதை அங்கீகரித்ததைக் கேட்க மிகச் சந்தோஷப்படுகிறோம்.

திருச்சியில் பெண்பாடசாலை:—திருச்சி இந்துமத சங்கத்தார் மூன்று பெண்கள் பாடசாலைகளை நடத்தி வருகிறார்கள். பெண்களுக்கு நீதிக்கதைகள் போதிக்கப்பட்டு வருகின்றன. இப்பாடசாலைகளுக்கு வருஷச்செலவு ரூபா. 959-3-5. கவர்ண்மெண்ட் உதவி ரூபா. 306 சம்பள வசூல் 283-2-0. மீதி 370-1-5. இச்சங்கத்தார் கொடுத்து உதவிபுரிந்து வருகிறார்களாம். இப்பாடசாலைகளுக்கு கட்டடம் கட்ட எண்ணியிருக்கிறார்களாம். முனிசிபாலிடியார் காலிநிலத்தைக்கொடுத்தால் திவான்பீஷ்கார் ம-ா-ா-ஸ்ரீ, ஏ. சங்கரய்யரவர்கள் ரூபா. 500 கொடுப்பதாகச் சொல்லியிருக்கிறாராம். மற்றவர்களும் உதவி புரிய முன் வருவார்களென்று எதிர்பார்க்கப்படுகிறது.

பர்ஹாம்பூர் கவர்ண்மேண்ட் பெண் பாடசாலை:—பர்ஹாம்பூரிலுள்ள கவர்ண்மெண்டு பெண் பாடசாலைக்கு 3-வது வகுப்பு முதற்கொண்டு ஸ்திரீ உபாத்தியாயர்களை நியமிக்கவும், அப்பாடசாலைக்கு தலைமை உபாத்தியாயரையும் ஒரு ஸ்திரீயை நியமிக்கவும், இதைப் பெண்கள் மாடல் சகண்டரி பாடசாலையாகச்செய்யவும், கல்வி இலாகா தலைவராகிய கனம் மிஸ்டர் ஸ்டோன் அவர்களுக்கு அவ்வூரார் ஒருமனுகொடுத்திருக்கிறார்கள். இவர்கள் கோரிக்கை நிறைவேறவேண்டியது அவசியமே.

திருவனந்தபுரத்தில் பெண்கல்வி:—பாடசாலையிற் படிக்கத் தகுந்தவர்களில் 100-க்கு 71-பிள்ளைகளும், 26-பெண்களும் பாடசாலைகளில் சென்ற வருஷத்தில் படித்துவந்தார்கள். இதற்கு முந்திய வருஷத்தில் 100-க்கு 67-பிள்ளைகளும் 24-பெண்களும் படித்துவந்தார்களாம். 27-பெண்கள் பாடசாலைகளிருக்கின்றன. இவைகளில் 5262-பெண்கள் படித்துவருகிறார்களாம். மேலும் 36,855-பெண்கள் ஆண்பிள்ளைகள் படிக்கும் பாடசாலைகளில் படித்து வருகிறார்களாம். இதனால் 100-க்கு 2-பெண் அதிகரித்திருப்பதாகத் தெரிகிறது. இதற்குக் காரணம் கவர்ன்மெண்டார் சில புதிய பாடசாலைகளை ஸ்தாபித்ததும், இன்ஸ்பெக்டரஸ்களை நியமித்ததுமென சொல்லப்படுகிறது. இப்பொழுது பெண்கல்வி விருத்தியாய் வருகிறது பிற்காலத்திற்கு நன்மையென்றும், இவ்விஷயமாகச் செய்யவேண்டியவைகள் இன்னுமதிகமிருக்கின்றனவென்றும், ஸ்திரீ உபாத்தியாயர்கள் கிடைப்பது அரிதாயிருக்கின்றதென்றும் அக்கவர்ன்மெண்டார் கூறுகிறது சரியே. அக் கவர்ன்மெண்டார் தயைகூர்ந்து நமக்கு அனுப்பிய ரிபோர்டு வந்துசேர்ந்தது. அக் கவர்ன்மெண்டாருக்கு நமது வந்தனத்தை யளிக்கின்றோம்.

1885ம் வருஷம் ஸ்தாபிக்கப்பட்டது.

எ ச் ச ரி க் கை ! !

நீர்ச்சூலை, யானைக்கால் முதலியவைகளை சொஸ்தப்படுத்தக்கூடிய உலக முழுவதும் பேர்பெற்றவும் விலையுயர்ந்தவுமான எங்களது மருந்துகளில் சில வற்றை போலிவைத்தியர்கள் சிலர் வீணான உத்தரவாதம் கொடுப்போம், சௌக்கியமடைவீர்களென புளிகிக்கொண்டுவிற்று வருவது எங்களுக்கு தெரிவருகிறது. அவ்வித மருந்துகள் கல்கத்தா 85, பெச்சு சட்டர்ஜி தெரிவிலுள்ள (மருந்துவியாபாரிகளாகிய) B. கோஷ் அண்டு கம்பெனியாருடைய டாக்டர் கோஷின் மருந்துகளல்ல.

எங்கள் மருந்துகள் சிவில் சர்ஜின் டாக்டர் சேம்பர்ஸால் ஆதரிக்கப் பட்டு வருகிறது.

டாக்டர் கோஷின் ஆச்சரியகரமான காட்சிப்பொருள்.
நீர்ச்சூலை, யானைக்கால், குடர்ப்பிதுக்கம்,
Varicocle, முதலியவைகளுக்குச் சிறந்த ஔஷதம்.

இந்தமருந்தை வெளியில் பூசினல் வியாதி நாள்பட்டிருந்தாலும் சரி எவ்விதமான வியாதியாயிருந்தாலும் சரி நிச்சயமாய் வியாதியை நீக்கிவிடும், ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2—8. அ.

ஒருபவுன்ட் நிறையுள்ளது ரூ. 30. எங்களுக்கு அநேகர் சிறந்த நற்காட்சி பத்திரங்க ளளித்திருக்கிறார்கள். டாக்டர் சேம்பர்ஸ் ஆதரிப்பவர், நரம்பு தளர்ச்சி, பலவீனம் எவ்விதத்தால் உண்டானபோதிலும் சரி இந்த எண்ணெயை உபயோகித்தால் கிழவர்களும் வாலிபராய் விடுவார்கள். ஒரு அவுன்ஸ் புட்டி விலை ரூ. 2. இதற்கும் நற்சாட்சி பத்திரங்களுண்டு.

பலவீனத்திற்கு டாக்டர் கோஷின் மருந்து.

நரம்பு தளர்ச்சியை உறுதிப்படுத்தத் தக்கமருந்து.

சிலநாள் இந்தமருந்தை உபயோகித்தால் உடனே குணம் தெரியவரும் கண்பார்வை, உண்டாகும். தேகபல முண்டாகும், ஞாபகசக்தியை யுண்டாக்கும், கண்மங்கலை நீக்கும், நாட்பட்ட மேகவெட்டை, சுளுக்கு, சளி, கோழை மூத்திரவியாதிகள் முதலியவைகளை சொஸ்தப்படுத்தும், ஒரு புட்டி விலை ரூ. 1. அ. 8.

டாக்டர் கோஷின் உலகபிரசித்திபெற்ற நன்னாரிவேர் சர்பத்து (Sarasaparilla) ஒருபுட்டி விலை ரூ. 1.

விநோதமான மோதிரங்கள்.

ரசாயன சாஸ்திரப்பிரகாரம் செய்யப்பட்டவைகள், இடதுகையில் எந்தவிரலில் போட்டுக்கொண்டாலும் வியாதியுள்ளவர்கள் வியாதியின்றி சுகமாயும், சந்தோஷமாயும், சுத்த இரத்தத்துடனு மிருப்பார்கள், ஒரு மோதிரம் விலை ரூ. 1—8—0. டசன் ரூ. 12.

மேற்கூறிய மருந்துகளும் மோதிரமும் வேண்டியவர்கள் இங்கிலீஷில் எழுதிப் பெற்றுக்கொள்ளலாம்.

B. GHOSE & CO,

CHEMISTS, (MODHOOR NEEKATUM)

85-1 Bechoo Chatterjee's Street, Calcutta.

தாய்மார், தங்கள் குழந்தைகளுக்கு ஸ்தன்னியபானஞ் செய்விப்பதற்குப்பாலில்லாமல் கஷ்டப்பட்டால், அப்பொழுது சதகுப்பையை உட்கொண்டால் மார்பில்வேண்டிய அளவு பால் சுரக்குமாம்.

சில மீன்கள் நடக்கின்றன வென்று ஒரு சாஸ்திரி கூறுகிறுர். அவை ஜலத்தில் நாற்காற் பிராணியைப்போல் நடந்து மற்ற மீன்களைப் பிடித்துத் தின்கின்றனவாம்; இவற்றிற்குத் தொட்டி மீன் என்று பெயராம்.

சீனர் தம் பெண்குழந்தைக்குப் பெயரிட நினைப்பது மிகவும் அருமை. முதலாம் புத்திரி இரண்டாம் புத்திரியென்று எண் முறையாகத் தம் மகளை அழைப்பதே வழக்கம்.

லண்டனைச் சேர்ந்த டார்லிங்டன் என்னும் ஊரிலிருக்கும் 18 வயதுள்ள மிஸ்ப்ளாரென்ஸ் ரெரஸ்வர் என்னும்மாது ஸமீபத்தில் $9\frac{1}{2}$ மணி நேரத்தில் 9 மைல் தூரம் நீந்திப்போனுளாம். அமைதியான தண்ணீரில் தன்னுேடுகூட நீந்தக்கூடிய ஸ்திரீ பூலோகத்திலுள்ள எந்த ஸ்திரீயாவது வரலாமென்று கேட்டிருக்கிறுளாம்.

சென்றமீ 22-தேதி எட்டியாபுரம் இராஜா திருவல்லிக்கேணி கோஷா ஆஸ்பத்திரியைப் போய்ப்பார்த்தார். அந்த ஆஸ்பத்திரிக்கு வேண்டிய ரண வைத்திய சிகிச்சைச் சாமான்களை வாங்கிக் கொடுப்பதாக ஒப்புக்கொண்டார்.

ஒரு பாத்திரத்திலுள்ள பாலை கலப்பான பாலென அறிய ஒரு சுலபமான வழியுண்டு. அதாவதுஒரு பளபளப்பான பின்னலூசியை பால்நிரப்பியுள்ள பாத்திரத்தில்விட்டு உடனே வெளியே எடுத்து பிடிக்க, பால் கலப்பில்லாதிருந்தால் அவ்வூசியின் அடியில் துளிபால் ஒட்டிக்கொண்டு நிற்கும். பால் கலப்புள்ளதா யிருப்பின் அத்துளி ஊசியில் ஒட்டாது.

நமது சென்னைக் கவர்னர் அவர்கள் கனம் வி. கிருஷ்ணசுவாமி ஐயர் அவர்கள் செய்யும் தோட்ட விருந்துக்கு இம்மாதம் 8-ஆம் தேதி புதன் கிழமை மாலை 6 மணிக்குச் சென்றிருந்தார். அன்று இராச்சாப்பாடு, மதராஸ் வாலண்டியர்கார்ட்ஸ் உத்தியோகஸ்தருடன் செய்தார். அநேக இந்திய கனவான்கள் இவ்விருந்திற்குச் சென்றிருந்தார்கள். 14-ந் தேதி லேடி லாலி மதராஸ் சிவில் ஆர்பன் அசைலத்தில் நடந்த கொண்டாட்டத்துக்குச் சென்று பரிசளித்தார்கள்.

மிஸ்கார்னிலியாசுரப்ஜி:—இம்மாது கோஷா வழக்கத்திலுள்ள ஜமீந்தார் குடும்பத்து ஸ்திரீகளுக்கு பற்பல வழிகளில் நன்மைபுரிந்து வருகின்றுர்கள். இம்மாது சென்ற வருஷத்தில் 62 ஜமீன்களைப் பார்த்ததுமன்றி 121 தடவை அஜ்ஜமீன் ஸ்திரீகளைப் போய் பார்த்தும் வந்தார்கள். இப்படிச்செய்ததில் இம்மாது அவர்களுக்குள்ள மனஸ்தாபங்களையும் குடும்ப கலகங்களையும் நீக்கினுள். ஸ்திரீகளுக்கும், அவர்கள் குழந்தைகளுக்கும் கல்விபுகட்டிவரவும், அவர்கள் தேகசௌக்கியம் முதலியவைகளைக் கவனித்து வரவும் தக்க ஏற்பாடு செய்தும் வந்தார்கள். இம்மாது வக்கில் பரிட்சையில் தேறியிருக்கிறுளென்பது நமது நேயர்களுக்குத் தெரியும். இம்மாது தமது சகோதரிகளுக்காக உழைத்துவரவேண்டுமென்றே இவ்விதம் செய்து வருகிறுர்கள். இதல்லவோ பரோபகார சிந்தை !

சென்ற 200-வருஷங்களாக ஜாம்நகர் மகாராஜா அரண்மனையின் பரம்பரை வைத்தியப் பண்டிதர்களின் குடும்பத்தில் உதித்தவர்.

வைத்தியருக்கு ஏன் வீணாகப் பணம் கொடுக்கிறீர்கள்.

உலகமெல்லாம் பிரசித்திபெற்ற எங்களுடைய

மதனமஞ்சரி மாத்திரைகள்.

வாங்கி உபயோகியுங்கள் இந்த மாத்திரைகள் தங்கம் போன்றவை.

ஆண் பெண் இருபாலரும் வியாதியிருந்தாலும் வியாதியில்லாது போனாலும் வாங்கிப்புசிக்கலாம். தேகத்துக்குப் பலமும் நரம்புகளுக்கு வீரியமும் கொடுப்பதில் இதைவிடச் சிறந்த ஔஷதம் வேறில்லை.

இவை சிறிதாகவும் ருசியாகவும் இலகுவில் சாப்பிடக்கூடியவையும் ஒரு நாளைக்கு இரண்டு மாத்திரை யாதொரு பத்தியமு மில்லாமல் குமரர் முதல் கிழவர் வரை யாரானாலும சரியே, எக்காலத்திலும் எத்தேசத்திலும் சாப்பிடலாம்.

இவை (1) இரத்தத்தை சுத்திசெய்து, அதிகப்படுத்தும்.

(2) சகல விதமான நரம்புத் தளர்ச்சியையும் நீக்கி மூளையை குளிர்ச்சி யடையசெய்து ஞாபகசக்தியை பலப்படுத்தும், மூத்திர சம்பந்தமான சகல வித நோய்களையும் பறக்கடிக்கும.

(3 உடம்பைச் சௌக்கியமும் பருமனும் அடையச்செய்யும்.

(4) புருஷத்துவத்தையும் வாலிபப்பருவத்தையும் கொடுக்கும்.

(5) வயிற சம்பந்தமான சகல நோய்களையும் போக்கி கஷ்டமில்லாமல் மலத்தை வெளிப்படுத்தும்.

(6) கிழப்பருவம் வாராதபடி காத்து, இழந்துப்போன வாலிபத்தை கொடுக்கும்.

(7) மேகம், மது மேகம், பித்தக்கூடு முதலிய சகல கொடிய நோய்களையும் வேருடன் போக்கும்.

8) ஜனனேந்திரியங்களுக்குப் பலத்தையும் வலுவையும் கொடுக்கும்.

40 மாத்திரைகள் அடங்கிய ஒரு டின் விலை ரூ 1. தபால்சார்ஜ் பிரத்தியே.கம்.

மேலே சொல்லிய மருந்துகளைப் பற்றியும் இன்னும் எங்களிடமுள்ள சிலாக்கியமான வேறே மருந்துகளைப் பற்றியும் எங்கள் வைத்திய வித்தியா புஸ்தகத்தை வாசியுங்கள். அது சுகத்துக்கும், ஐசுவரியத்துக்கும் க்ஷேமத்துக்கும் பெரிய வழிகாட்டியாகும்.

இங்கிலீஷ், தமிழ், தெலுங்கு, குஜராத்தி, இந்தி, பெங்காளி, மராட்டி, இந்துஸ்தானி, முதலிய எந்தப்பாஷயில் வேண்டுமானாலும் இந்தப் புஸ்தகத்தை இனாமாக நாங்களே வேபில் ஒட்டியனுப்புவோம்.

லக்ஷக்கணக்கான புஸ்தகங்கள் இதுவரை செலவாயிருக்கின்றன.

☞ ஜாம்நகர் மகாராஜா எமது மருந்துகளைக் குறித்து முதல்திற நற்சாட்சிப்பத்திரம் கொடுத்திருக்கிறார்கள். பெனாரிஸ் இண்டஸ்டிரியல் எக்ஸிபிஷனில் மெடலும் முதல்திற சர்டிபிகேட்டும் அளிக்கப்பட்டிருக்கின்றன.

☞ ராஜவைத்திய நாராயணஜி கேசவஜி,

புரொப்ரைடர் ஆயுர்வேதோதய ஔஷதாலயா,

No 177, சைனாபஜார்ரோட் ஜமேதார் காட்டுக்கெதிரில் சென்னை.

அமெரிக்காவில் ஒருபரீக்ஷகன் மண்எண்ணெய்க்குப்பதிலாகச் சுலபமான ஒருபொருளைக் கண்டுபிடித்திருக்கிறான். இதைச்செய்வதற்கு டின் ஒன்றுக்கு ஒரு அணு விலை முடிகின்றது. இதைச் செய்யும் விதம் என்னவெனில், சில மூலிகைகளால் ஒருவிதமான உப்பை உற்பத்திசெய்து அந்த உப்பை ஜலத்தில் கரைத்தால் அவ்வளவு ஜலமும் எண்ணெயைப்போல் எரியக்கூடிய சத்துள்ளதாய் ஆகிவிடுகிறது. மண்ணெண்ணெயை விட மூன்றுமடங்கு வெளிச்சத்தை இந்த உப்பு ஜலம் கொடுக்கிறதாம்.

பிரிஸ்டல் அப்ஸாவா பத்திரிகையின் நிருபர் ஒருவர் பின் வருமாறு எழுதியிருக்கிறார்.—"நான் பற்பல இடங்களில் ஆடுகள் நீர் குடிக்கின்றனவா என்பதைப் பற்றி சோதித்திருக்கிறேன். ஒன்றுவது நீர் குடிக்கவில்லை. ப்ரான்ஸில் அநேகம் ஆடுகளும் நீர் குடியாமலே ஜீவித்து வருகின்றனவாம். ஆப்பிரிக்கா தேசத்து ஸௌடான் ஜூலாஜிகல் தோட்டத்தில் ஒரு கிளி 50 வருஷ காலமாய் நீரின் ஸ்பரிசமே யில்லாமல் ஜீவித்து வந்ததாய்ச் சொல்லுகிறார்கள்."

சென்னையிலுள்ள மெஸாஸ் ரென்பெனட் கம்பெனியார் தங்களிடம் வழக்கமாய்ப் பத்து வரவு செய்பவர்களில் ஒருவருக்கு இங்கிலாந்துக்குப் போய்த் திரும்ப முதல் வகுப்பு டிக்கெட்டும் ஸ்டீமர் பிரயாணச் செலவும் இனமாகக்கொடுப்பதாகச் சில தினங்களுக்கு முன் விளம்பரஞ் செய்திருந்தார்கள். சீட்டுப் போட்டுப் பார்த்து யாருக்கு சீட்டு விழுகிறதோ அவருக்குக் கொடுப்பதாக ஏற்கெனவே ஏற்பாடு செய்திருந்தார்கள். இக்கம்பெனியாருடைய பத்து வரவுக்காரர்களுள் ஒருவராகிய கொச்சி திவான் மனைவியாகிய மிஸ்ஸஸ் பெனர்ஜிக்கு இந்தச் சீட்டு விழுந்திருக்கிறது.

லார்டு கர்ஸன், ஏரல் கிரே, லார்டு ஜியார்ஜ் ஹாமில்டன், ஸர் ஜியார்ஜ் சீட் இவர்கள் நால்வரும் சேர்ந்து கையெழுத்திட்டு ஒரு பகிரங்கக்கடிதம் வெளிப்படுத்தி யிருக்கிறார்கள். ஏகாதிபத்தியத்தில் உள்ள ஜனங்கள் அரசரின் முடிசூட்டு வைபவத்தின்போது அவருக்கு ஏதாவது நல்ல வெகுமானம் கொடுக்கவேண்டு மென்றும், அதை உத்தேசித்து நிதி சேர்க்க ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதென்றும், ஒரு பென்னிமுதல் ஐந்து பவுன் வரையில் கொடுக்கப்படும். தொகைகள் சந்தோஷத்துடன் பெற்றுக்கொள்ளப்படும் என்றும், அப்படி நன்கொடை யளித்தவர்களின் பெயர்களடங்கிய ஜாபிதா அரசருக்கு வாசித்துக் காண்பிக்கப்படுமென்றும் அந்தக் கடிதத்தில் கண்டிருக்கிறது.

ஜெர்மனி தேசத்தில் வெஸ்ட்பேலியா மாகாணத்தில் குயில் முதல் முறை கூவுகிறதைக் குடியானவர்கள் கேட்டவுடன் புல்லின் மேல் படுத்துப் பலதடவை புரளுவார்கள். அப்படிச்செய்வதால் அந்த வருஷம் முழுதும் அவர்களுக்கு இடுப்புப்பிடிப்பு, இடுப்புவலி முதலான இடையைப் பற்றிய உபத்திரவங்கள் வாராவாம். மேலும் அவர்கள் தரையில் புரண்டுகொண்டிருக்கையில் இன்னும் ஒருமுறை குயில் பாடினால் அதிக சுகிர்தமாம். மூடர்கள் இல்லாத ஜனங்களுள்ள தேசம் உலகத்தில் எங்குதானிருக்கிறது? கல்வியறிவும் நாகரிகமும் மிக அடைந்திருக்கிறதாகச் சொல்லிக்கொள்ளும் தேசங்களிலேயே இப்பேர்ப்பட்ட காரியங்களின்மேல் நம்பிக்கை வைத்தால், மற்ற தேசங்களுக்குச் சொல்லவும் வேண்டுமா ?"

ஆதங்க நிக்ரஹ ஔஷிதசாலஸ.

ஜகப்பிரசித்தியான

ஆதங்க நிக்கிரஹ மாத்திரைகள்

நோயுள்ளவர்களுக்கும், நோயற்றவர்களுக்கும், ஆடவர்களுக்கும், ஸ்திரீகளுக்கும், உபயுக்தமான ஆதங்க நிர்கிரஹ மாத்திரைகள் தற்கால பலவிருத்தி ஔஷதங்களுக்கெல்லாம் தலைவன்.

இந்தமாத்திரைகள்.

(1) ஜிரணசம்பந்தமான தொந்திரவுகளை நிவர்த்திப்பன.
(2) நரம்பு ஸ்தானங்களைப் பலப்படுத்துவன.
(3) இழந்துபோன ஞாபக சக்தியைத் திரும்பக்கொடுத்து ஞாபக சக்தியைப் பெருக்குவன.
(4) இரத்தசுத்தி விருத்திசெய்வன.
(5) தேகத்துக்குப் பலத்தையும், ஊக்கத்தையும், சுருசுருப்பையுங் கொடுப்பன.
(6) உயிர் நிலைகளைத் திடப்படுத்துவன.
(7) கனவிலுண்டாகும் கெட்ட எண்ணத்தை அடியோடே நிறுத்துவன.
(8) இழந்துபோன பலத்தைத் திரும்பவும் கொடுப்பன.

32. மாத்திரைகளடங்கிய டப்பி 1-க்கு ரூ. 1—0—0.

இனாம்! இனாம்!! இனாம்!!

காமசாஸ்திரம்.

அல்லது

ஆரோக்கியம், செல்வம், சுகம் இவைகளைக்காட்டும் கைப்புத்தகம்.

உமது தேக ஆரோக்கியத்தைக் குறித்துக் கவலையிருந்தால் உமது விலாசத்தைத் தெரிவியும்; உடனே தபாற்கூலியுடன் இனாமாக 160-பக்கங்களடங்கிய ஷை காமசாஸ்திரப் புத்தகம் அனுப்பப்படும்.

வைத்தியசாஸ்திரி,
மணிசங்கர் கோவிந்தஜீ,
ஆதங்க நிக்கிரஹ ஔஷதாலயம்.

ஹெட் ஆபீஸ்:—ஜாம்நகர், கத்தியவார்.
பிராஞ்சு ஆபீஸ்:—மதிராஸ், 22, பிராட்வே.